Registered as a news paper. இலவசப் பிரதி பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ராம்கோ ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
(சி-485)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 30 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்ஹிஜ்ஜா 13 (13.02.2003) வியாழக்கிழமை இதழ் :134



மானிப்பாயில் தாக்கப்பட்ட போராளிகளில் மூவரை முதற்படத்திலும், தாக்குதல் நடாத்திய படையினரை 2· ஆவது படத்திலும், தப்பியோடும் மக்களை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# மானிப்பாயில் பெண் போராளிகள் மீது ராணுவம் மிருகத்தனமான தாக்குதல்

## என் கண் முன்னால் நடந்த யுத்த நிறுத்த மீறல் சம்பவம்!

### கண்காணிப்புக் குழுத் தலைவர்

(மானிப்பாய்)

கடந்த ஏழு மாதகாலப் பகுதியில் எனது கண் முன்னாலேயே நடந்த மிக மோசமான யுத்தநிறுத்த மீறல், நேற்று மானிப்பாயில் நடந்துள்ளது. இலங்கைப் படையினர் இந்த மோசமான யுத்தநிறுத்த மீறலை மேற்கொண்டிருந்திருந்தனர்.

- இவ்வாறு யாழ். மாவட்ட இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஒலே புறூண்டம் தெரிவித்தார்.

நேற்று மானிப்பாயில் பெண் போராளிகள் மீது இராணுவத்தினர் திரண்டு தாக்குதல் நடாத்தியதும் அதனைத் தொடர்ந்து, அங்கு கூடிய மக்கள் மீது படையினர் பொல்லுகள், கம்பிகள் கொண்டு கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தியதும் என்னைப் பொறுத்தவரையில் மிக மோசமான - மன்னிக்க முடியாத யுத்த நிறுத்த மீறல் ஆகும். (10 ஆம் பக்கம் பார்க்க)

## இடுப்புப்பட்டிகளும் பலவந்தமாக பறித்தெடுப்பு

(யாழ்ப்பாணம்)

**மானிப்பாய்ப் பகுதியில் அரசியல் பணிக்காகச் சென்று கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் எட்டுப்பேர், மானிப்பாய் மருதடிப் பகுதியில் வைத்து - இராணுவத்தினரால் வழிமறிக்கப்பட்டு - அவர்கள் அணிந்திருந்த இடுப்புப்பட்டிகள் பலவந்தமாக பறித்தெடுக்கப்பட்டன. இதன்போது போராளிகள் கடுமையாகத் தாக்கப்பட்டனர். போராளிகளுக்கு உதவச் சென்ற பொதுமக்களும் படையினரால் துரத்தி அடிக்கப்பட்டனர்.**

விடுதலைப் புலிகள் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையின் விபரம் வருமாறு:-

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் நிராயுதபாணிகளாக யாழ்.மாவட்டத்தில் அரசியல் பணிகளில் ஈடுபட்டுவந்த பெண் போராளிகள் நேற்று மானிப்பாய் பகுதியில் வைத்து அரச படைகளாலும், ஈ.பி.டி.பி. தேச விரோதிகளாலும் வன்மையாகத் தாக்கப்பட்டு இம்சைப்படுத்தப்பட்டுள்ளனர்.

காலை 9.30 மணியளவில் யாழ்.மானிப்பாய்ப் பகுதியில் அரசியல் பணியில் ஈடுபட்டிருந்த - ஆனந்தி, தமிழ்த்தென்றல், எழில், கமலினி, தமிழினி, கலைமதி, வித்தியா, கோமகள் ஆகிய விடுதலைப் புலிகள் அமைப்பைச் (10 ஆம் பக்கம் பார்க்க)

## நியாயம் கேட்டுச் சென்ற மக்கள் மீது படையினர் பொல்லுகளால் தாக்குதல்

(மானிப்பாய்)

மானிப்பாயில் நேற்றுக்காலை பெண்போராளிகள் மீது படையினர் தாக்குதல் நடத்திய சமயம், நூற்றுக்கணக்கான பொதுமக்கள் திரண்டு சென்று மானிப்பாய் இராணுவ முகாமுக்குள் புகுந்து நியாயம் கேட்க முற்பட்டபோது, படையினர் கண்மூடித்தனமான முறையில் நீண்ட பொல்லுகள் கொண்டு தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

மானிப்பாய், மருதடிச் சந்தியில் உள்ள இராணுவமுகாமின் முன்பாகவே, பெண் போராளிகள் மீதான நேற்றைய தாக்குதல் நிகழ்ந்தது. சம் (10 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தநிறுத்த மீறல் என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம்!

### மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா கூறுகிறார்

"மானிப்பாயில் பெண்போராளிகள் இடுப்புப்பட்டி அணிந்து சென்ற சமயம் அவற்றை படைச்சிப்பாய்கள் பலாத்காரமாகப் பறித்தெடுத்த சம்பவம், ஓர் யுத்தநிறுத்த மீறல் என்பதனை நாம் ஏற்றுக் கொள்கின்றோம்.

- இவ்வாறு யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நேற்று மாலை யாழ். மாவட்ட யுத்த நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் விடுதலைப் புலிகளுக்கும், யாழ். படை அதிகாரிகளுக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாலை 3.30 மணியளவில் ஆரம்பமாகிய இந்தச் சந்திப்பின்போது, விடுதலைப் புலிகள் தரப்பில் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தலைமையிலான குழுவினரும், இராணுவத் தரப்பில் யாழ் . மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, யாழ். மாவட்ட பிரதி இராணு (10 ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகையாளர்கள் மீதும் மூர்க்கமாகப் பாய்ந்த படையினர்!


(மானிப்பாய்)

மானிப்பாயில் நேற்று நடைபெற்ற படையினரின் தாக்குதல் நடவடிக்கைகள் தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற பத்திரிகையாளர்கள் மீதும் படையினர் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

நேற்றுக்காலை மேற்படி சம்பவம் குறித்து அறிந்து கொண்டதும் பல பகுதிகளிலிருந்தும் பத்திரிகையாளர்கள் பலர், அப்பகுதிக்கு விரைந்து சென்றனர்.

அச்சமயம் படையினர், மருதடிச் சந்தியிலிருந்து பொதுமக்களை ஓட ஓட மானிப்பாய் பிரதேசசபைக் கட்டடம் வரை விரட்டி அடித்தனர். மக்கள் பதற்றத்தின் மத்தியிலும் படையினருக்கு எதிராகக் கற்களை வீசி எறிந்து பதில் தாக்குதலைத் தொடுத்தனர். இதனால் மானிப்பாய் மருதடிப் பகுதி களேபரமாகக் காட் (10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



சனம் திருப்பி மிருகத்தனம் காட்டினால் மிச்சம் என்னெண்டு விளங்கியிருக்கும்...!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003
ICC Cricket World Cup South Africa 2003
இன்றைய ஆட்டங்கள்
மே.இந்தியத்தீவுகள் Vs நியூசிலாந்து - St.Georges Parr, Port Elitabeth
சிம்பாப்வே Vs இங்கிலாந்து - Harare Sports Club, Harare

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021 - 2223916, 0777 - 517019
(சி -518) 01-505632, 074-612656, 01-390128

# இலங்கையில் நிரந்தர அமைதி ஏற்பட்டாலும் திரும்புவது பற்றி அகதிகளே முடிவெடுப்பர்

## பிரான்ஸ் பிரதி வெளிவிவகார அமைச்சர்

பிரான்ஸில் தங்கியிருக்கும் 60 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகளை, இலங்கையில் நிரந்தர அமைதி தோன்றும்வரை பிரான்ஸில் தங்கியிருப்பதற்கான வாய்ப்பு வழங்கப்படும் என்று பிரான்ஸின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ரெனோ முசாலியர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையில் நிரந்தர அமைதி நிலை தோன்றிய பின்னரும்கூட, பிரான்ஸில் தங்கியுள்ள அகதிகள் மீளத் திரும்புவதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் வாய்ப்பு அவர்களுக்கே வழங்கப்படும்.

அத்துடன், பிரான்ஸ் இலங்கையின் சமாதான முயற்சிகளில் தலையீடு செய்ய முனையாது. ஆனால், அமைதி முயற்சிக்கு சகல ஆதரவுகளையும் வழங்கும்.

ரோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்கும் பிரான்ஸ் தனது பங்களிப்பை வழங்கும் என்றும் பிரான்ஸின் பிரதி வெளிவிவகார அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இலங்கைப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தொடர்பான உதவிகளை பிரான்ஸ் வழங்கும். பிரான்ஸ் சட்ட அமைப்பிலுள்ள பண்புகள் குறித்து விளக்கமளிக்கவும், அதனை இங்கு தீர்வுக்குப் பயன்படுத்துவது தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்கும் பிரான்ஸ் தயாராகவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# மிருசுவில் படுகொலை சம்பவம் மனிதநேயத்துக்கு எதிரானது

## அரச சட்டத்தரணி தெரிவிப்பு

மிருசுவிலில் எட்டு அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம், மனிதநேயத்துக்கு எதிரானது என அரச சட்டத்தரணி சரத் ஜெயமான தெரிவித்தார்.

மிருசுவில் படுகொலைகள் தொடர்பாக நடத்தப்பட்டுவரும் ட்ரயல் அட் பார் விசாரணைகளின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். நீதியரசர் ஏ.எம்.இமாம் தலைமையிலான மூன்று நீதியரசர்கள் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதில் அரச சட்டத்தரணி மேலும் தெரிவித்ததாவது, எட்டுப் பொதுமக்கள் படுகொலைசெய்யப்பட்ட சம்பவம் ஒரு பழிவாங்கும் செயற்பாடாகும். இதனை அனுமதிக்க முடியாது.

இந்தப் படுகொலைகளின் மூலம் இராணுவத்தின் ஒழுங்குக் கட்டுப்பாடுகள் மீறப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட படையினர் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்த வழக்கில், நேரில் பார்த்த சாட்சியான பொ.மகேஸ்வரனின் வாக்கு மூலமும் பதிவு செய்யப்பட்டது.

### திருமலையில் சட்டபீடம் அமைக்கக் கோரிக்கை

திருமலையில் சட்டபீடம் ஒன்றை அமைக்குமாறு திருமலை மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

வட - கிழக்குப் பகுதிகளிலுள்ள மாணவர்களுக்கென சட்டபீடம் எதுவுமில்லை. இதனால், திருமலையில் சட்டபீடம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என திருமலை மாவட்ட சிரேஷ்ட சட்டத்தரணி ஓ.எல்.எம்.இஸ்மாயில் தலைமையிலான குழு உயர்கல்வி அமைச்சைக் கோரியுள்ளது.

# தேசிய வளங்கள் விற்பனையின் பின்னணியில் அரசியல்வாதிகள்?

(கொழும்பு)

தேசிய வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதில் இலங்கை முக்கிய இடத்தை வகிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல்வாதிகளின் பின்னணியில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதால் தமக்கு சுதந்திரமாக இயங்கமுடியவில்லை என சுங்கத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

வருடந்தோறும் சட்டவிரோதமான முறையில் தேக்க மரங்கள் உட்பட பல அரிய மரவகைகளும், ஏனைய வளங்களும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

இதன்மூலம் சம்பந்தப்பட்ட ஏற்றுமதியாளர்களுக்கு அதிக வருமானம் கிடைத்து வருவதாகவும் சுங்க அதிகாரிகள் கூறியுள்ளனர். (01)

# இத்தாலி செல்ல முயன்ற 46 பேர் தங்காலையில் கைது!

சட்டவிரோமாக இத்தாலிக்குச் சென்ற 46 இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தங்காலையில் இடம்பெற்றுள்ளது. நேற்று அதிகாலை 2 மணியளவில் இவர்கள் அனைவரும் இத்தாலிக்குச் செல்ல ஆயத்தமான வேளையிலேயே கைது செய்யப்பட்டுள்ளதாக தங்காலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இத்தாலியப் பயணத்திற்காக இவர்களிடம் இருந்து தலா ஐந்து லட்சம் ரூபா, பயண முகவரினால் பெறப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது. (01)

# மத்திய கிழக்கு நெருக்கடியாலேயே அனானின் இலங்கை விஜயம் ரத்து!

(கொழும்பு)

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள பதற்றத்தினாலேயே ஐ.நா. பொதுச் செயலாளர் கோபி அனானின் இலங்கை விஜயம் ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளுக்கு கோபி அனான் இம்மாதப் பிற்பகுதியில் விஜயம் செய்யவிருந்தார். மத்திய கிழக்கு நெருக்கடியினாலேயே இந்த விஜயம் ரத்துச் செய்யப்பட்டதாகவும், அணிசேரா நாடுகளின் கூட்டத் தொடருக்குப் பின்னர் கோபி அனான் இலங்கைக்கு விஜயம் செய்யலாம் என்றும் வெளிவிவகார அமைச்சுப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

### இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் செ.செல்வநாயகம் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக வணபிதா எஸ்.டேமியன், உதவிக் கல்விப்பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் ஆகியோர் கலந்துகொள்வர்.

### இரத்ததானம்

(மானிப்பாய்)

மானிப்பாய் பரிஷ் லியோக் கழகம் - யாழ்.போதனா வைத்தியசாலையின் தற்போதைய தேவையைக் கருத்தில் கொண்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை இரத்தான முகாம் ஒன்றை வைத்தியசாலை இரத்த வங்கியில் ஒழுங்கு செய்தது.

இந்த இரத்ததான நிகழ்வில் பல கழக உறுப்பினர்கள் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினர்.

# முன்பள்ளி மேம்பாட்டு நிலையம் முத்திரைச்சந்தியில் திறந்துவைப்பு

யாழ். மாவட்ட முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத் திறப்புவிழா கடந்த செவ்வாய் காலை 10.30 மணிக்கு யாழ். முத்திரைச் சந்தி, செம்மணி வீதியில் அமைந்துள்ள மூலவளக் கட்டட நிலையத்தில் வலிகாமக் கல்வி வலய, ஆரம்பக்கல்வி பிரிவு உதவிக் கல்விப்பணிப்பாளர் சிவநேசன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை யாழ். மாவட்ட அரசிற் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியும், தமிழர் புனர்வாழ்வுக் கொடியினை தமிழர் புனர்வாழ்வுக் கழக யாழ். மாவட்டப் பணிப்பாளர் வரனும், முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையக் கொடியினை யாழ்.மாவட்ட முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய இணைப்பாளரும் ஏற்றிவைத்தனர்.

பெயர்ப் பலகையினை சிறுவர் பாது காப்பு நிதிய திட்டப் பணிப்பாளர் அலிஸ்ரர் கிக் திரைநீக்கம் செய்து வைக்க, பொதுச்சுடரினை மாகாண மேலதிகக் கல்விப்பணிப்பாளர் திரு மதி மகாலிங்கம், பங்குத்தந்தை ஜோர்ஜ் அடிகள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கிருஷ்ணசாமி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து நிலையக் கட்டடத்தை யுனிசெப் நிறுவனத் திட்டப்பணிப்பாளர் செலின், நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

# இன்றைய நாள் இனிய நாள்

**13-02-2003 - வியாழக்கிழமை**

பீம ஏகாதசி விரதம்

| | |
|---|---|
| மேடம் | :- தேகசுகம், பெரியோர் மதிப்பு, களஸ்திரசுகம், சோம்பல், மனப்பயம். |
| இடபம் | :- மனக்கவலை, குடும்பக்கலகம், வயிற்றில் ரோகம், வாகன நஷ்டம். |
| மிதுனம் | :- சுபகாரிய அனுகூலம், உயர்ந்த நிலை, வாகன சுகம், அந்நியர் உதவி. |
| கர்க்கடகம் | :- ஏமாற்றப்படுதல், நேத்திரரோகம், இடையூறு, இனசன விரோதம். |
| சிங்கம் | :- நற்கீர்த்தி, அதிக செலவு, குடும்ப மகிழ்ச்சி, மனநிம்மதி. |
| கன்னி | :- தார புத்திர மகிழ்ச்சி, வாகன யோகம், சிநேகிதர் உதவி, பணவரவு. |

பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்

| | |
|---|---|
| துலாம் | :- பொறாமை, காரிய விக்கினம், குடும்ப சுகம், இல்லச்சிறப்பு. |
| விருச்சிகம் | :- அதிக பிரயாசை, களஸ்திர சுகம், லட்சுமிகரம், குடும்ப மகிழ்ச்சி. |
| தனு | :- தேகசுகக் குறைவு, ஏமாற்றம், பிரயாணக் கஷ்டம், காரிய விக்கினம். |
| மகரம் | :- சத்துரு ஜயம், வாக்கு வசீகரம், உயர்ந்த நிலை, களஸ்திர சுகம். |
| கும்பம் | :- மனப்பயம், தேகசுகக் குறைவு, தனநாசம், சிநேகித உதவி. |
| மீனம் | :- வாகன சுகம், பெண்களால் நன்மை, மனமகிழ்ச்சி, காரிய சித்தி. |

ராஜா
யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தினவெளியீடு
விஜய், ஸ்நேகா நடித்த
வசீகரா



10.30, 2.30, 6.00, 9.30 (சி-545)
ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்துகொள்ளவும்.

நிறைஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
இன்றுமுதல் மாதவன், மீரா ஜஸ்மின் நடித்த
ரன்
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 காட்சி
THE MUMMY RETURNS
(சி-544)

யாழ்.நகரில் பிரபல்யமான வர்த்தக நிறுவனத்திற்கு
விற்பனையாளர் தேவை
புத்தகம், பாடசாலை உபகரணம், அலுவலக உபகரணம் ஆகியனவற்றுக்கு விற்பனையாளர்கள் -
நெல் குற்றும் இயந்திர வகை, உதிரி இலத்திரனியல் பொருள்கள் ஆகியவற்றில் கைதேர்ந்த, ஆங்கில அறிவுள்ள விற்பனையாளர்கள் தேவை.
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். முன் அனுபவம் உடையோருக்கு முதன்மை இடம். நேரில் வரவும்.
ஆல் சிலோன் டிஸ்ரிப்பியூட்டேர்ஸ்,
212, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
(சி - 583) T.P. No.: 021 - 2225542

அச்சுவேலி ஸ்ரீதேவி அரிசி ஆலை
நேற்றுமுதல் கோலாகலமாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
யாழ்.மாவட்ட மக்களுக்கு தரமான "முத்தரிசி"யை வழங்குவதற்காக அச்சுவேலியில் ஸ்ரீதேவி அரிசி ஆலை சேவையை மீண்டும் ஆரம்பித்துள்ளது.
உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில்
யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்
உயர்திரு. மாவை.சேனாதிராசா M.P
அவர்கள் மங்களகரமாக ஆரம்பித்து வைத்தார்.
உங்கள் இல்லங்களில், ஆலயங்களில் நடைபெறும் வைபவங்களுக்கு கல் நீக்கப்பட்ட நல்ல தரமான
● குத்தரிசி ● தீட்டல் அரிசி ● உடையல்பச்சை வகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
உங்கள் திருப்தியே எங்கள் சேவை
- வே.முத்துலிங்கம்,
ஸ்ரீதேவி அரிசி ஆலை,
அச்சுவேலி.
(சி - 582)
T.P.070 - 212222
021 - 2222017

## மருந்தகத்துக்கு காணி கொள்வனவு

(புத்தூர்)

புத்தூர் கிழக்கில் இயங்கி வரும் மத்திய மருந்தகத்திற்குச் சொந்தமாகக் காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் வாடகைக் காணியிலேயே மேற்படி மருந்தகம் இயங்கிவந்தது. தற்போது வைத்திய சாலை அபிவிருத்திச்சபையினர் அப்பகுதி மக்களின் நிதியுதவியுடன் காணியொன்றைக் கொள்வனவு செய்துள்ளனர். இதனைச் சுகாதாரப் பகுதியினரிடம் கையளிக்கவுள்ளனர். (110)

## சிலைகள் திருட்டு; சந்தேகநபர்கள் விளக்க மறியலில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலுள்ள ஆலயங்களின் விக்கிரகங்கள், ஐம்பொன் சிலைகள் திருடப்பட்டு வந்த சம்பவங்களில் தொடர்புடையவர்களெனச் சந்தேகத்தின்பேரில் கைதாகிய ஆறுபேரையும் 21 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்க மல்லாகம் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (68)

# கந்தரோடையில் விகாரை அமைப்பு; கண்டித்து பொது அமைப்புக்கள் பேரணி!

கந்தரோடையில் பௌத்த விகாரை ஒன்றை அமைப்பதற்குப் படையினர் ஏற்பாடு செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து - கண்டனப் பேரணி ஒன்றை நடத்துவதற்கு வலிகாமம் கோட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஏறபாடுகளைச் செய்துவருகின்றது.

இது தொடர்பாகக் கலந்துரையாடும் கூட்டம் நேற்று முன்தினம் மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்தில் இடம பெற்றது. இதில் வலிகாமம் கோட்டப பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இந்தக் கூட டத்திலேயே -

கந்தரோடையில் பௌத்த விகாரை அமைப்பதற்காக எடுத்துவரும் நடவடிக்கைகளையும், குடாநாட்டில் அரச மரங்கள் இருக்குமிடங்களில் புத்தர் சிலைகள்' வைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும் கண்டனப் பேரணியை நடத்துவதற்கு முடிவுசெய்யப்பட்டது.

தொல்லியல் ஆராய்ச்சியில் முக்கியத்துவம் வாய்ந்த இடமாகக் கருதப் படும் கந்தரோடையில் விகாரை ஒன்றை அமைப்பதற்கான முன்னேற்பாடாக, அரச மரமொன்றின் கீழ் படையினரால் புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு இராணுவப் பாதுகாப்பும் வழங்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே கண்டனப் பேரணி நடத்தப்படவுள்ளது.

இதுதொடர்பாக ஆராய நடத்தப்பட்ட கலந்துரையாடலில் பங்குபற்றிய பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் -

இது புத்த மதத்துக்கோ, சிங்களவர்களுக்கோ, எதிரான போராட்டமாக இருக்காது. நயினாதீவிலும், யாழ்.நகரிலும் விகாரைகள் அமைந்திருப்பதை நாம் எதிர்க்கவில்லை.

ஆனால், குடாநாடெங்கும் அரச மரங்கள் உள்ள இடங்களில் புத்தர் சிலை வைக்கப்படுவதை பொறுத்துக் கொள்ளமுடியாது. இது ஒரு திட்டமிட்ட ஆக்கிரமிப்பு முயற்சியாகவே தென்படுகின்றது.

ஆரம்பகாலத்தில் இத்தகைய நடவடிக்கைகள் மூலமே கிழக்கு மாகாணத்தில் எமது பிரதேசம் சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டது. எனவே இந்த முயற்சிகளை ஆரம்பத்திலேயே எதிர்ப்பதற்காக கண்டனப் பேரணி நடத்துவது அவசியமானது எனத் தெரிவித்தனர். கண்டனப் பேரணி நடத்தும் திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

(68)

# புலிகளிடம் உள்ள சிறுவர்கள் குறித்து ஐ.நா. அதிகாரிகள் ஆராய வேண்டும்

## *ஜனாதிபதியின் விருப்பம் குறித்து ஹரீம்*

(கொழும்பு)

அண்மையில் முடிவடைந்த சமாதானப் பேச்சுக்களில் சிறுவர் உரிமைகள் பற்றி ஆராயப்பட்டமை முக்கியத்துவம் வாய்ந்தது என்று ஜனாதிபதி கூறியுள்ளார்.

ஆயினும் இந்த விடயம் பேச்சுக்களுடன் மாத்திரம் நின்று விடக்கூடாது என்று ஜனாதிபதி வலியுறுத்தியதாக அவரது பேச்சாளர் பீரிஸ் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் முகாம்களில் உள்ள சிறுவர்களைப் பற்றி அறிந்து கொள்வதற்காக யுனிசெப் அல்லது ஐக்கிய நாடுகளின் அதிகாரிகள் அங்கு அனுப்பப்படவேண்டும் என்று ஜனாதிபதி கருதுகிறார். இந்தச் சிறுவர்கள் கூடியவிரைவில் அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும் என்றும் ஜனாதிபதி கூறியுள்ளதாக ஹரீம் பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

## மோட்டார் சைக்கிள் விபத்தில் காயம்

(கொழும்புத்துறை)

மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் அதில் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி உடுவில் சந்திக்கு அண்மையில் இடம்பெற்ற இவ்விபத்தில் உடுவிலைச் சேர்ந்த நவநேசகுமார் (வயது 30) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

## தங்கும் விடுதி விவசாயபீட மாணவர் பாவனைக்கு!

(யாழ்ப்பாணம்)

இதுவரை பயணிகள் தங்குமிட விடுதியாக உபயோகிக்கப்பட்ட கோணாவளை வீதியில் அமைந்துள்ள விடுதி - யாழ். பல்கலைக்கழக விவசாயபீட மாணவர்களின் பாவனைக்காகத் தற்காலிகமாக வழங்கப் பட்டுள்ளது.

இதனால் நல்லூர் பிரதேசசபையினால் நடாத்தப்பட்டு வந்த விடுதி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பிரதேசசபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

# யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபை உறுப்பினர்களிடமுள்ள அரச சொத்துக்கள், வாகனங்களைப் பொறுப்பேற்குக

## வடக்கு – கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் உத்தரவு

யாழ்.மாவட்டத்திலுள்ள மாநகர, நகர, பிரதேசசபைகளின் ஆயுட்காலம் எதிர்வரும் 17 ஆம் திகதி முடிவடையவுள்ளதால் - இந்த உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களிடம் உள்ள அரசாங்கச் சொத்துக்கள் மற்றும் வாகனங்களைப் பொறுப்பேற்குமாறு, வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் -மாநகரசபை ஆணையாளர் மற்றும் அரசாங்கச் செயலாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பான சுற்று நிருபம் மாநகர ஆணையாளர் மற்றும் நகர, பிரதேசசபைகளின் செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சிசபைகளின் உறுப்பினர்களிடம் உள்ள அரச சொத்துக்கள், வாகனங்களைப் பொறுபேற்றும் படியும் இதில் பிரச்சினைகள் எதுவும் ஏற்பட்டால் தமக்கு அறிவிக்கும்படியும் வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்று நிருபத்தில் கூறப்பட்டிருக்கிறது.

# சமாதான தீபமேற்றும் நிகழ்வு விடுதலைப் புலிகளும் ஆதரவு

புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்து ஒரு வருடம் பூர்த்தியாவதையொட்டி இம்மாதம் 22 ஆம் திகதி விசேட நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மக்கள் அன்று மாலை 6.50 மணிக்கு அலுவலகங்களிலும், வீடுகளிலும் இத்தினத்தைக் குறிக்குமுகமாக விளக்கேற்றிவைக்க வேண்டும் என அரசாங்கம் கேட்டுள்ளது.

இதனையொட்டிய உத்தியோகபூர்வ வைபவம் சுதந்திர சதுக்கத்தில் இடம்பெறும். மதத் தலைவர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், விவசாயிகள், கலைஞர்கள், முப்படையினர் ஆகியோர் இந்த வைபவத்தில் கலந்து கொள்வார்கள்.

சகல தொலைக்காட்சி, வானொலி நிலையங்கள் அன்றைய தின வைபவத்தை நேரடியாக ஒலி, ஒளி பரப்பும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலும் சமாதான தீபம் ஏற்றும் நிகழ்வைக் கொண்டாட புலிகளின் சமாதானச் செயலகம் இணக்கம் தெரிவித்துள்ளது.

# இராணுவத் தளபதி இன்று நீதிமன்றில் ஆஜராக மாட்டார்!

(கொழும்பு)

கண்டி - உடதலவின்னவின் பத்து முஸ்லிம் இளைஞர்கள் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் இடம்பெற்ற தினத்தன்று படுகொலை செய்யப்பட்டது தொடர்பான வழக்கில் இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல இன்று காட்சியமளிக்கமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று நீதிமன்றத்தில் ஆஜயராகி சாட்சியமளிக்கும்படி கண்டி மேல நீதிமன்றம் இராணுவத் தளபதிக்கு உததரவிட்டிருந்தது.

இந்திய விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் கிருஷ்ணசாமிக்கு இன்று விமானப் படைதலைமையகத்தில் வரவேற்பு வழங்கப்படவுள்ளதால் அந் நிகழ்வில் கலந்துகொள்ள வேண்டியிருப்பதாக இராணுவத் தளபதி நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

இதையடுத்து வேறொரு தினத்தில் நீதிமன்றில் ஆஜயராகி காட்சியமளிக்க இராணுவத் தளபதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# பிரான்ஸ் எவ்வாறு உதவலாம்; ஆராயவே யாழ்ப்பாணம் வந்தோம்

## பிரான்ஸ் அமைச்சர் றெனோ தெரிவிப்பு

'பிரான்ஸ் அரசாங்கம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வட-கிழக்குப் பகுதிகளுக்கு - குறிப்பாக யாழ். குடாநாட்டிற்கு எந்தவகையில் உதவி செய்யலாம் என்பதை ஆராய்வதற்கே என்னை நேரடியாக யாழ்ப்பாணத்திற்கு அனுப்பியுள்ளது' என நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வந்த பிரான்ஸ் நாட்டின் உதவி வெளிவிவகார அமைச்சர் றெனோ முசாலியர் 'நமது ஈழநாட்டுக்குத்' தெரிவித்தார்.

அவர் மேலும் தனது யாழ். விஜயம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் - ஜனாதிபதியுடனும் மற்றும் பல உயரதிகாரிகளுடனும் பேச்சு நடத்திவிட்டுத்தான் நான் இங்கு வந்துள்ளேன். யாழ்ப்பாணத்திற்கு வந்துபார்த்தபோது தான் இங்கு இவ்வளவு கொடூரமாக யுத்தம் நடைபெற்றுள்ளது, அழிவுகள் ஏற்பட்டுள்ளது என்பது எமக்கு தெரிகின்றது எனவும் தெரிவித்ததுடன்,

பிரான்ஸ் அரசாங்கம் இங்கு நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முழுமையாக வரவேற்கின்றது. இந்த சமாதானப் பேச்சுக்கள் தொடரவேண்டும். சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றங்களைக் கருத்தில் எடுத்துத்தான் பிரான்ஸ் அரசாங்கம் இலங்கைக்கு உதவிகளை வழங்கும்.

பிரெஞ்சு மொழியை இங்குள்ள மக்களும் கற்கவேண்டும். இதன் மூலம்தான் எமக்கும் உங்களுக்கும் உள்ள தொடர்பு வலுப்படும். இதற்காகத்தான் நாம் 800 புத்தகங்களை யாழ். பொதுநூலகத்திற்கு கையளிக்கின்றோம். இப்புத்தகங்களை கற்பதற்கு வசதியாக பிரான்ஸ் நாட்டின் அதிகாரி ஒருவர் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப் படவுள்ளார். இவர் யாழ்ப்பாணத்திலேயே தங்கியிருந்து தனது கடமைகளைச் செய்வார்.

இவ்வருட இறுதியில் நிரந்தரமாகப் பிரான்ஸ் அரசாங்கத்தின் அலுவலகம் ஒன்று யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்படும். இலங்கை மக்களுடன் பிரான்ஸ் மக்கள் நண்பர்களாகவே இருக்க விரும்புகின்றனர். எனவே நண்பர்கள் என்ற ரீதியில் இலங்கைக்கு பிரான்ஸ் நாடு உதவிகளை தொடர்ந்து வழங்குமென அவர் மேலும் தெரிவித்தார்.



ஐ.ஐ.எஸ். கனினி நிறுவன ஆண்டு விழாவில் மாணவி ஒருவர் நிறுவனப் பணிப்பாளரிடமிருந்து சான்றிதழ் பெறுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில் HAPPY BIRTHDAY



பெயர் : ம.மேரிஜெனிஸ்ரெலா
முகவரி: வேலணை - 3



எட்டாவது அகவையில்.

பெயர் :வை.திவ்விகா
முகவரி:அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.





பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:----------------------------------------

முகவரி:----------------------------------------

பிறந்த ஆண்டு:----------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

--------------------
பெற்றார் ஒப்பம்


## அரியாலையில் மண் அகழப்படுகிறது

(அரியாலை)

அரியாலைப் பகுதியில் தொடர்ந் தும் சட்டவிரோதமாக மண் அகழப் பட்டு உழவு இயந்திரங்களில் கொண்டு செல்லப்படுகிறது.

இதுகுறித்து எவரும் நடவ டிக்கை எடுக்காதிருப்பது பற்றி அப் பகுதி மக்கள் விசனம் தெரிவித் துள்ளனர். (55)

## விளாவெளிப் பகுதிக்கு மின் வழங்க ஏற்பாடு

(இளவாலை)

நீண்டகாலமாக மின்சாரம் வழங்கப் படாதிருந்த விளாவெளிப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளது. இப் பகுதியில் வசிக்கும் மக்கள் மின்சார சபையிடம் விடுத்த கோரிக்கையை அடுத்தே இப்பகுதிக்கு மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொட்டிலடியில் இருந்து பெஞ்ச மின் சந்திவரை வரும் மின்னிணைப் பைப் பயன்படுத்தி, பெஞ்சமின் சந் தியில் புதிய மின்மாற்றி பொருத்தப் பட்டு இப்பகுதிக்கு மின்சாரம் வழங் கப்படவுள்ளது. தற்போது மின்சாரம் வழங்குவதற்கான பூர்வாங்க வேலை கள் துரிதகதியில் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. (41)

## ஓமந்தையில் துப்பாக்கிச் சூட்டில் சிப்பாய் பலி

(வவுனியா)

ஓமந்தைப் பகுதியில் கடந்த சனியன்று நடைபெற்ற தவறுதலான துப்பாக்கிச்சூட்டில் இராணுவச் சிப் பாய் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மற்றுமோர் சிப்பாயின் தவறுதலான துப்பாக்கிச்சூட்டில் சிக்கியே இவர் பலியானதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துளளது.

## ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

ஜனசக்தி காப்புறுதி நிறுவனத் தால் நடமாடும் சேவை எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 9 மணிமுதல் கிளிநொச்சி அரச செலகத்தில் நடைபெறவுள்ளது.

# நீரிழிவு நோய் DIABETES

பகுதி 18

- ச.ஆ.கோபாலமூர்த்தி.

### உடல் எடைச் சுட்டெண்ணைக் கணிக்கும் முறை

கிலோ கிராமில் உடல் எடையைக் கணித்து அதனை மீற்றரில் கணிக்கப்பட்ட உயரத்தின் வர்க்கத்தால் உடல் எடைச் சுட்டெண் கிடைக்கும். உதாரணம்: ஒருவரது நிறை 70 கிலோ கிராமாகவும் அவரது உயரம் 1.5 மீற்றராகவும் இருந்தால் அவரது உடல் எடைச் சுட்டெண்

$$BMI = \frac{70}{(1.5)^2} = \frac{70}{2.25} = 31$$

எனக் கணிக்கப்படும்.


BMI 30 க்கு மேலிருந்தால் அவர் மிகுபருமன் உடையவர் எனவும், 25 க்கும் 29க்கும் இடையில் இருந்தால் மிகுபருமனை அண்மித்தவர் அல்லது நிறை கூடியவர் எனவும், 18.5 கதும் 24.9 இற்கும் இடையில் இருந் தால் அவர் சாதாரண நிறையுடையவர் எனவும், 18.5 க்கும் குறைவாக இருந்தால் அவர் நிறை குறைந்தவர் எனவும் கருதப்படுகிறார். எனவே ஒவ்வொருவரும் தமது உடல் எடைச் சுட்டெண் 18.5 க்கும் 24.9 க்கும் இடையில் இருக்கத்தக்கதாகத் தமது உடல் எடையைப் பேணுதல் நன்று. இதனைக் கணிப்பது சிலருக்குச் சிரமமானதாக இருக்கக்கூடும். இவர் களுக்கு உதவுவதற்காக இலங்கை நீரிழிவுச் சங்கம் சிபார்சு செய்துள்ள உயரத்துக்கு ஏற்ற சராசரி நிறை அட்டவணை இங்கு தரப்படுகிறது. எவ்வகையிலாவது தமது உடலுக்கு ஏற்புடைய நிறையைப் பேணுதல் அவசியமானதாகும்.

### இலங்கை நீரிழிவுச் சங்கம் சிபார்சு செய்துள்ள உயரத்துக்கு ஏற்ற நிறை அட்டவணை

| பெண்கள் | | ஆண்கள் | |
|---|---|---|---|
| உயரம் | நிறை (இறாத்தல்) | உயரம் | நிறை (இறாத்தல்) |
| 4′10″ | 90 | 4′10″ | 94 |
| 4′11″ | 95 | 4′11″ | 100 |
| 5′ | 100 | 5′ | 106 |
| 5′1″ | 105 | 5′1″ | 112 |
| 5′2″ | 110 | 5′2″ | 118 |
| 5′3″ | 115 | 5′3″ | 124 |
| 5′4″ | 120 | 5′4″ | 130 |
| 5′5″ | 125 | 5′5″ | 136 |
| 5′6″ | 130 | 5′6″ | 142 |
| 5′7″ | 135 | 5′7″ | 148 |
| 5′8″ | 140 | 5′8″ | 154 |
| 5′9″ | 145 | 5′9″ | 160 |
| 5′10″ | 150 | 5′10″ | 166 |
| 5′11″ | 155 | 5′11″ | 172 |
| 6′ | 160 | 6′ | 178 |

இந்த அட்டவணைக்கமைய அல்லது உடல் எடைச் சுட்டெண் 18.5 இற்கும் 24.9 க்கும் இடையில் அமையுமாறு நிறையைப் பேணுவதற்குப் பொருத்தமான உணவைத் தெரிவுசெய்வதற்கு உதவுவதற்காகத், தாவர உணவுகள் சிலவற்றில் அடங்கியுள்ள பிரதான சத்துக்களைச் சித்தரிக்கும் அட்டவணை நாளை.....

(தொடரும்)



நமது ஈழநாடு வழங்கும்




# உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

MEGA பரிசுப் போட்டி

முதற்பரிசு - 25,000

வழங்குவோர்: **இரத்தினம் ஊர்தி சேவைத்தளம்**

[இரத்தின கோபால்ஸின் இணைந்த நிறுவனம்]

32, சிறாம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

அனைத்து வகையான மோட்டார் சைக்கிள்களும் நவீன இயந்திரங்களினால் சேவிஸ் செய்து கொடுக்கப்படும்.


இரண்டாம் பரிசு - 15,000

வழங்குவோர்: **1. ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்**

YONEX MULTI PALACE

விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்.

76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



**2. சமுத்திரா ரேட்ஸ் (லிமிட்டட்)**

3/2 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். தொ.பே. 222 2938

டீசல் என்ஜின், நெல் குற்றும், மா அரைக்கும், இயந்திரங்கள் உதிரிப்பாக விற்பனையாளர்கள்.

மூன்றாம் பரிசு - 10,000

வழங்குவோர்: **சந்தியா மல்ரிகோட்யாட்**

531, பருத்தித்துறை வீதி, நல்லூர், பிரதான வீதி, பண்டத்தரிப்பு

Fancy goods, gift items, fevicryl & acron paint items.



இன்னும் ஏராளமான ஆறுதல் பரிசுகள்!
வினாக்கொத்துக்கு விடை தந்து
பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்!!

## உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003

### வெல்லுங்கள்...! அள்ளுங்கள்...!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் பற்றிய வினாக்களுக்கு விடை தந்து பணப்பரிசுகளை, வெகுமதிகளை உங்களதாக்குங்கள்.

1. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1975 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடைபெற்றது? (....................)
2. இரண்டு முறை தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று மூன்றாவது முறையாக வெல்லும் வாய்ப்பை இழந்த அணி எது? (....................)
3. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்தெந்த நாடுகளில் நடைபெறப்போகின்றன? (....................)
4. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட்டத்தொடர் நாயக னாக (MAN OF THE SERIES) விளங்கப்போகும் வீரன் யார்? (....................)
5. 2003 உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போகும் அணி யாது? (....................)

பூர்த்தி செய்துவிட்டீர்களா...? இது போன்ற ஐந்து கூப்பன்களை ஒரே வகையில் பூர்த்தி செய்து, எதிர்வரும் மார்ச் 06 ஆம் திகதிக்கு முன்பாக -

'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குத் தபாலிலோ, நேரிலோ அனுப்பி வையுங்கள்.

பெயர்: ----------------------------------------
வயது: ----------------------------------------
முகவரி: ----------------------------------------
----------------------------------------



*சரியான விடைகளை எழுதுபவர்களிலிருந்து அதிர்ஷ்ட சாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.*

*போட்டி முடிவுகள் மார்ச் 28 ஆம் திகதியன்று 'நமது ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும்.*

# துடிதுடிக்கப் பாலகரைக் கொன்றவர்கள்

சிறுவர்களை ஆயுதப்படைகளில் சேர்த்துக்கொள்வது சர்வதேச விதிகளின்படி குற்றம், விடுதலைப் புலிகள் சிறுவர்களைத் தமது படையில் சேர்த்து வருகிறார்கள் - சிறுவர்களை அவர்கள் வலுக்கட்டாயமாகப் பிடித்துத் தமது படையில் சேர்க்கிறார்கள்.

- இதுபற்றி உடனடியாக விசாரணை செய்து தமக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உத்தரவிட்டிருந்தார்.

"சண்டேலீடர்" என்ற ஆங்கில வாரப்பத்திரிகை சமீபத்தில் முதற்பக்கச் செய்தியில் - கிழக்கு மாகாணத்தில் சிறுவர்களை வடுதலைப் புலிகள் பலவந்தமாகப் பிடித்துச் செல்வதாகச் தகவல் வெளியிட்டிருந்தது. தாய்மார் இருவரின் புகைப்படங்களை வெளியிட்டு இருந்தது. இதுபற்றி அதே பத்திரிகை நடுப்பக்கத்தில் பெரிய கட்டுரையையும் பிரசுரித்திருந்தது.

லக்ஸ்மன் கதிர்காமர் வெளியுறவு அமைச்சராக இருந்தபோது, சர்வதேச மாநாடுகளில் - விடுதலைப் புலிகள் சிறுவர்களைத் தங்கள் படையில் சேர்த்துக்கொள்வது பற்றிக் குற்றம் சுமத்திவந்தார்.

இலங்கையில் சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் மட்டுமல்ல, அரசியல்வாதிகளும், ஆன்மீகத் தலைவர்களும்கூட இக் குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்து, விடுதலைப்புலிகள் மீது கண்டனம் தெரிவித்துவந்தனர்.

இப்படிக் குற்றச்சாட்டுக்களையும், கண்டனங்களையும் தெரிவித்தவர்கள் - தமிழ்ச் சிறுவர்கள் மீதுகொண்ட பாசத்தினாலும், பற்றினாலும் இக்குற்றச்சாட்டுக்களைச் சுமத்தவில்லை. விடுதலைப்புலிகள் மீது என்னென்ன குற்றச்சாட்டுக்களை சுமத்தலாம், எப்படி எப்படிக் கண்டனம் தெரிவித்து உலக நாடுகளில் விடுதலைப் புலிகளின் விடுதலைப் போராட்டத்திற்கு மாசு கற்பிக்கலாம் எனபதனையே நோக்கமாகக் கொண்டிருந்தன, கொண்டிருக்கின்றன.

1989 - ஆம் ஆண்டில் இலங்கைகக்கு அமைதி காக்கவென வந்திருந்த இந்திய இராணுவம், இலங்கையிலிருந்து வெளியேறுவதற்கு

# மனிதநேயம் பற்றிப் பேசும் விந்தை

ஆயத்தமாகிக் கொண்டிருந்த சமயத்தில் நடந்த சம்பவங்களை தமிழ் மக்கள் மறந்துவிட்டார்களா?

வட - கிழக்கு மாகாண அரசாங்கத்தினால் 'தமிழ்த் தேசிய இராணுவம்' உருவாக்கப்படுகிறது என்ற செய்தி வெளிவந்ததும், ஜனாதிபதி பிரேமதாசா இதுபற்றி விசாரித்தார். அப்படியொன்றும் இல்லை என்று முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் மறுததார்.

**எஸ்.எம்.ஜி**

ஆனால், வடக்கிலும் கிழக்கிலும் கல்விகற்கச் சென்ற சிறுவர்கள், இளைஞர்கள் வலுக்கட்டாயமாகத் தமிழ்த் தேசிய இராணுவத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டனர். பஸ்களில், ரயில்களில் பயணம் செய்த சிறுவர்களும், இளைஞர்களும் - அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தபோது- அடித்து, மிரட்டி படைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். தாய் தந்தையர்களுடன் பாதுகாப்பாகச் சென்ற சிறுவர்களும், இளைஞர்களும்- அவர்களின் பாதுகாப்பிலிருந்து பலவந்தமாகப் பிரித்து இழுத்துச் செல்லப்பட்டனர். இதனால் இந்தக் குழுவினரைப் பிள்ளை பிடிகாரர் என்று வடக்கு - கிழக்குத் தமிழ் மக்கள் பட்டம் சூட்டித் தங்கள் பிள்ளைகளைப் பல கஷ்டங்களுக்கு மத்தியில் விமானத்திலேற்றிக் கொழும்புக்கு அனுப்பிவைத்தார்கள் என்பதை இப்போது குற்றமும் கண்டனமும் தெரிவிப்பவர்கள் மறந்து விட்டார்களோ? அப்போது அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லையோ?

விமானப்பயணத்திற்குப் பணம் இல்லாத பெற்றோர் - தங்கள் சிறுவர்களையும், இளைஞர்களையும் விடுதலைப்புலிகளிடம் போய்ப் பாதுகாப்பாக இருங்கள் என்று புலிப் படை முகாம்களிற்கு அனுப்பியது இன்று கண்டனம் தெரிவிப்பவர்களுக்குத் தெரியவில்லையோ?

வன்னியிலும் மற்றும் வடக்கின் பல பகுதிகளிலும் அத்தியாவசிய உணவுப் பொருட்களும், மருந்துகளும் கிடைக்காமல் பெரியர்களோடு, சிறுவர்களும் இளைஞர்களும் அல்லற்பட்டபோது, விடுதலைப் புலிகளிடம் போய்சேருங்கள், உங்களுக்கு உணவும், மருந்தும் மட்டுமல்ல படிப்பும், நல்ல பயிற்சியும், வாழ்க்கை முறைகளும் கற்றுத் தருவார்கள் என்று பெற்றோரே சிறுவர்களையும் இஞைர்களையும் அனுப்பிவைத்தது - இன்று சிறுவர்களைப் புலிகள் பிடிக்கிறார்கள் என்று கூச்சலிடுபவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லைத்தான்.

அத்தியாவசிய உணவுப் பொருள்களும், மருந்துகளும் வன்னிப் பகுதியிலும், மன்னார்ப் பகுதியிலும் கிடைககாதபோது - மக்கள் அவற்றுக்காக ஓலமிட்டபோது - செவிமடுக்காதவர்களும் - உணவும், மருந்தும் புலிகளுக்குத்தான் போய்ச் சேருகின்றன என்று எழுதிய சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளும் - சிறுவர்களைப் புலிகள் படையில் பலவந்தமாகச் சேர்க்கின்றார்களென ஒப்பாரி வைக்கின்றன.

இன்று சிறுவர்களுக்காக ஓலமிடும் சந்திரிகா அம்மையார் தொடக்கம், அவரது ஒலிபெருக்கி கதிர்காமரும் மற்றும் சிறுவர்களைப் படையில் சேர்ப்பது பற்றி தோண்டி எழுதும் பத்திரிகைகளும் - அரசாங்கம் விதித்த பொருளாதாரத் தடைகளால் - உணவின்மையால், போஷாக்கின்மையால் குழந்தைகளின் பிறப்பு, இறப்பு பாதித்தது பற்றி ஆராய்ந்து - அந்த அவல நிலையை எடுத்துக்காட்டியிருக்கின்றார்களா?

நாகர்கோவிலில் அநியாயமாகப் பாடசாலைச் சிறார்களை கொன்றொழித்தது இவர்களுக்குத் தெரியாமல் எங்கேபோனது?

மிருசுவிலில் ஐந்து வயதுப் பாலகனைக்கூடச் சுட்டுப் புதைதத கொடுமையை எந்தச் சிங்களத் தலைவராவது கண்டித்தாரா?

பந்துனுவெவவில் தமிழ் இளந் தலைமுறையினர் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டபோது, இன்று சிறுவர்களுக்காக முதலைக் கண்ணீர் வடிப்பவர்கள், கண்டித்து அல்லது கவலை தெரிவித்து ஒருவார்த்தையாவது சொன்னார்களா, எழுதினார்களா?

இன்று, இன்னமும் அகதிமுகாம்களிலுள்ள அவலநிலையைப் பற்றி யாராவது கவலைப்பட்டு அக்கறையுடன் கவனம் செலுத்துகிறார்களா?

சொந்த மண்ணிலேயே அகதிகளாக வாழும் குடும்பங்களில் எத்தனை சிறார்கள், எத்தனை கஷ்டங்களுக்குள் வாழ்கிறார்கள் என்பதை எவராவது சிந்திக்கிறார்களா?

இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் 'வாடா மலர்' ஜெயலலிதாவின் ஆட்சியில் இலங்கை அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ள முகாம்களில் சிறுவர்களின் அவலநிலையைப் பற்றி யாரும் கண்டு கொள்ளக் காணோம்!

ஆனால், விடுதலைப் புலிகள் - சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் வைத்திருக்கிறார்கள், கல்வியூட்டுகிறார்கள், நல்ல பயிற்சியளிக்கிறார்கள், பழக்கவழக்கங்கள் சொல்லிக் கொடுககிறார்கள்.

இதனால்தான் யுனிசெப் அமைப்பிலிருந்து வந்த பெலாமி அம்மையார், புலிகளின் சிறுவர் நலத்திட்டத்தைப் பார்த்து திருப்தி தெரிவித்துச் சென்றிருக்கிறார்.

உலகில் எந்த நாடுகளில் எல்லாம் அடக்குமுறை, ஒடுக்குமுறைகளுக்கெதிராக மக்கள் வேறு வழியின்றி ஆயுதப்போராட்டம் நடத்துகிறார்களோ- அங்கெல்லாம் சிறுவர்களும், இளைஞர்களும் படைக்ளில் இருக்கிறார்கள்.

பலவந்தமாகப் படைகளுக்கு இழுத்துச் செல்லப்படுபவர்கள் மனம் ஒப்பாமல் அங்கு நீடித்திருப்பார்களா? ஓலமிடுபவர்கள் உண்மையை, நியாயத்தை உணரும் பக்குவத்தை எப்போது பெறப்போகிறார்கள்? ☆

# ஓர் இரவில் - 'டிம் லைற்' சோதனை

## யாழ்ப்பாணத்தில் டிம் லைற்கள் இல்லை

பிரதம ஆசிரியர்,
ஈழநாடு,
யாழ்ப்பாணம்.

வே.கலைவாணி,
மல்லாகம்.
03.02.2003.

ஐயா!

நான் ஓர் அரச ஊழியர். மோட்டார் சைக்கிளில் பிரயாணம் செய்பவள். சமாதானச் சூழல் ஏற்பட்டதன் பின், மோட்டார் சைக்கிள்களின் பாவனை யாழ்ப்பாணத்தில் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. பகல் நேரத்தில் பிரயாணம் செயவதுகூட சிரமம். ஆனால், இரவில் பிரயாணம் செய்வது மிகமிகச் சிரமமாகவுள்ளது. வாகனத்தின் விளக்குகளை சாரதிகள் வீதி ஒழுங்கு முறைகளுக்கு ஏற்ப பயன்படுத்தாமையே இதற்கான காரணமாகும். இரவு வேளைகளில் ஒரு வாகனம் பயணம் செய்யும்போது, எதிரில் வருகின்ற வாகனச் சாரதிக்குச் சிரமமின்றி வாகனத்தைச் செலுத்த உதவியாக, **Head Light** ஐ மாற்றி **dim light** ஐப் பாவிக்கவேண்டும் என்பது ஓட்டுநர் ஒழுக்கக்கோவையில் உண்டு. ஆனால், யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை யாருமே இந்நடவடிக்கையினை மேற்கொள்வதில்லை. இக்கடிதத்தினை தங்கள் பத்திரிகையில் பிரசுரிப்பதன் மூலம், பலருக்கு வீதி ஒழுங்குகளைச் சாவர பின்பற்ற அறிவுறுத்த முடியும் என்று நம்புகிறேன். இதன் மூலம் தேவையற்ற விபத்துக்களையும் தவிர்க்க முடியுமல்லவா? இக்கடிதத்தின் மூலம் ஒரு மனித உயிர் காப்பாற்றப்பட்டால்க்கூட அது எனக்கு மகிழ்வைத்தரும்.

நன்றி

இக்கடிதத்தில் உள்ள விடயங்களைப் பரிசீலிப்பதற்காக 11.02.2003 அன்று இரவு 8.00-9.00 மணிவரை யாழ்.நகரத்திலிருந்து மல்லாகம்வரை ஒரு கள ஆய்வினை மேற்கொண்டோம்.

நாம் ஒரு சுப்பா கப் 90 மோட்டார் சைககிளில் பிரயாணத்தை ஆரம்பித்தோம். எதிரில் 176 வாகனங்களை எதிர்கொண்டோம். இவற்றில் மோட்டார் சைக்கிள்களே அதிகம். கார், வான், லொறி போன்றனவும் எதிர்கொண்டன. இதில் இரு சாரதிகள் (ஒருவர் மோட்டார் சைக்கிள், மற்றவர் கார்) மட்டும் - நாம் முகப்பு வெளிச்சத்தை (**Head light**) தாழ்த்திக் காட்டியபின் (**dim light**), பதிலுக்கு அவர்களும் அவ்வாறு செய்தார்கள். ஏனைய 174 சாரதிகளும் நாம் இரண்டு அல்லது மூன்று தடவை முகப்பு வெளிச்சத்தைத் தாழ்த்திக் காட்டிய போதிலும், கண்டுகொள்ளவில்லை. இதிலிருந்து கலைவாணி என்பவரால் எழுதப்பட்ட கடிதம் முற்றிலும் நியாயமானது என்ற முடிவுக்கு வரமுடிந்தது.

சகல வாகனங்களும் தயாரிக்கப்படும்போது - இரவு, பகல் ஆகிய இருவேளைகளிலும் பிரயாணம் செய்யக் கூடியவாறே தயாரிக்கப்படுகின்றன. பாவனையாளர்களும் இரவு, பகல் தேவைகளுக்காகவே அவற்றை வாஙகுகின்றனர். ஆனால், வாகன ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடிப்பதில் பின்னடைவே காணப்படுகின்றது.

பொதுவாக வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள விளக்குகளைப் பார்ப்போம்.

**1.Head light** - முகப்பு வெளிச்சம்

**2.Dim light** - பதிவாக பாய்ச்சும் வெளிச்சம் (ஒளிர்தன்மையும் குறைவு)

**3.Park light** - இரவில் வாகனம் தரித்து நிற்கும்போது போடப்படுவது.

**4.Signal light** - திரும்பும்போதும், இரவில் இன்னோர் வாகனத்தை எதிர்கொள்ளும்போதும் பாவிப்பது. தூரத்திற்குத் தெரியத்தக்க துல்லியமான செம்மஞ்சள் வெளிச்சம் -அணைந்து, அணைந்து ஒளிரும்.

**5.Brake light** - வாகனம் நிறுத்தப்படும்போது வாகனத்தின் பின்புறமாக எரியும் சிவப்பு வெளிச்சம்.

**6. Inside light**-வாகனத்தின் கூடாரத்தில் உட்புறமாகப் பொருத்தப்பட்டிருப்பது. இரவில் வாகனத்திற்குள் இருப்பவர்கள் பாவிப்பது.

**7. Focus light** - காட்டுப் பாதைகளுக்கூடாகப் பிரயாணம் செய்யும் போது யானை, காட்டெருமை, போன்ற ஆபத்து விளைவிக்கக்கூடிய மிருகங்களைக் கண்டறிவதற்காக வாகனத்தின் முகப்புக்கூரையில் பொருத்தப்படுகின்ற அதிசக்தி வாய்ந்த வெளிச்ச விளக்கு.

**8. Emergency light** - அம்புலன்ஸ், போக்குவரத்துப் பொலிஸாரின் வாகனங்களில் மேற்புறமாகப் பொருத்தப்பட்டிருக்கும் (சிவப்பு, நீல நிற வெளிச்சம்)

**9. Snow light**- பனிகொட்டும் பகுதிகளின் அல்லது மலைப் பிரதேசங்களில் பகல் பொழுதில்கூட இருள்போல இருப்பதால், இளம் பச்சை நிறமான இந்த விளக்குகள் பாவிக்கப்படுவதுண்டு.

இவை வ்ாகனத்தின் முன்புறமாக முகப்பு வெளிச்சம் பொருத்தப்பட்டுள்ளதையும்விட, தாழ்வாகப் பொருத்தப்பட்டிருக்கும்.

இவ்வாறான பல்வேறு வெளிச்சங்களும் இரவு நேரத்தில் பாதுகாப்பாகப் பிரயாணம் செய்வதற்காக வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ளன. இவற்றில் மிக அடிப்படையான விடயம்தான் முகப்பு விளக்கின் ஒளியை மாற்றுவது. இந்த அடிப்படை விடயத்திற்கூட யாழ்ப்பாணத்துச் சாரதிகள், கவனம் செலுத்தாது இருப்பது அவர்களின் வீதி ஒழுங்கு பற்றிய எச்சரிக்கை இன்மையையே காட்டுகிறது.



வாகனச் சாரதிகள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டிய ஒரு விடயம் என்பதால், இவை மக்கள் மத்தியில் சென்றடைய வேண்டும் என்பதற்காக இத்தகவல்கள் தேவைப்படுகின்றன:

கொஞ்சம் பொறுங்கள். இறுதியாக ஒரு விடயம்.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் 1994 இல் வெளியிடப்பட்ட வீதிஒழுங்கு நூல் இந்த டிம் லைற் விடயம் பற்றி என்ன சொல்கிறது என்று பார்ப்போம்.

*38 ஆவது விதி:*

ஒளியூட்டப்பட்ட பகுதிகளில் தேவையின்றி தங்கள் முகப்பு வெளிச்சங்களை உபயோகிக்காதீர்கள். வீதியில் ஏனைய வாகனங்களைச் சந்திக்கும் பொழுது முகப்பு வெளிச்சங்களைப் பதிவாகப் பாய்ச்சுங்கள்.

தாங்கள் முந்திச்செல்லக் கருதாத இன்னோர் வாகனத்திற்கு அண்மையாக பின்தொடரும்போது, முகப்பு வெளிச்சங்களை அணைத்து விடுங்கள். அல்லது தணித்து எரியுங்கள்.

தங்கள் முகப்பு வெளிச்சங்கள் தனித்து எரிக்கப்படும்போது விசேட கவனம் செலுத்துங்கள்.

- என்கிறது அது.

களம் ஆய்ந்தறிந்தவர்கள் -
**செந்தூரன் விஜயன்.**

# பழையதில் நுழைந்தொரு பசுமைப்புரட்சி....

இன்றைய வளர்ந்துவரும் விஞ்ஞானயுகத்திலே மனிதனிற்குச் சவாலாக அமைந்துள்ள விடயங்களில் சூழல் மாசடைதல் என்பது முக்கிய இடத்தினை வகிக்கின்றது என்பதை யாராலும் மறுத்து விடமுடியாது. எந்த மனிதன் தனது நேரத்தைச் சுருக்கி தனக்கான தேவைகளைப் பூர்த்தி செய்யவென விஞ்ஞானத்தைப் புகுத்தி பல்வேறுபட்ட கண்டுபிடிப்புக்களைச் செய்தானோ, அதே மனிதன் அவ்வாறான புல கண்டுபிடிப்புக்களால் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் வேண்டத்தகாத பின்விளைவுகளை எதிர்கொள்ள வேணடியவனாகிறான். அந்த வகையில்- பலதரப்பட்ட தேவைகளிற்காக உருவாக்கப்பட்ட பொலித்தீன் **(Polyethene)**, பொலிபுறப்பைலீன் **(Polypropylene)**, பொலிவைனைல் குளோரைட்டு **(Poly Vynyle Chlorite)** மற்றும் பிளாஸ்டிக் **(Plastic)** என விதவிதமான விஞ்ஞானப் பெயர்களைத் தாங்கி மனித பயன்பாட்டிலுள்ள சேதனப் பல்பகுதியச் சேர்வைகளும் அடங்குகின்றன. இப்பல்பகுதியத்தின் கண்டுபிடிப்பால் எவ்வளவிற்கு எவ்வளவு மகிழ்ந்த நாம், இன்று அதனைக் கண்டு அஞ்சி ஓட வேண்டிய நிலையில் உள்ளோம் என்பதை நினைவுக்குக் கொண்டு வருதல் அவசியமாகும்.

இன்றுள்ள நிலையில் எந்தவொரு குடும்பத்தினதும் அன்றாட வாழ்க்கையுடன் ஒட்டிப்போயுள்ள விடயங்களில் இப்பல்பகுதியங்களின் பயன்பாடும் முக்கியமான தொன்றாகும். காலையில் பயன்படுத்தும் பிளாஸ்டிக், தேநீர் குவளை தொடங்கி மதியம் உணவு பரிமாறப் பயன்படுத்தும் **Lunch Sheet** உட்பட எத்தனை தேவைக்கு எத்தனை தடவைகள் இப்பல்பகுதியங்களைப் பயன்படுத்துகிறோம்.

யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளை எடுத்துக்கொள்வோமானால், குறிப்பாக யாழ்ப்பாண நகரப் பகுதி மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அமைந்துள்ள சுற்றாடலில் அதிகளவு பொலித்தீன் பைகள், பிளாஸ்டிக் குவளைகள், **Lunch Sheet** வகைகள், ஐஸ்கிறீம் குவளைகள் எனப் பல வடிவங்களில், பல அளவுகளில், பல வர்ணங்களில் இப்பல்பகுதியப் பொருட்கள் விசிறப்பட்டுள்ளதை அல்லது எரிக்கப்பட்டு முற்றாக அழிவடையாத கரிப் பெறுதிகளைக் காணக் கூடியதாயுள்ளது. ஏன் இவ்வகையான பொருட்களை நாம் முற்றாக அழிக்க முடியாதுள்ளது? என்பதை ஆராயு மிடத்து, நாம் சாதாரணமாக எமது பயன்பாட்டுக்குத் தேவையில்லாதவற்றை நிலத்தில் புதைத்தோ அல்லது நெருப்பில் எரித்தோ அழிக்க முயல்கிறோம். அவ்வேளையில் மணணிலுள்ள நுண்ணுயிர்களால் பிரிகையடைதலாக்கல் என்ற செயன்முறை மூலம் இவ்வாறு நிலத்தில் புதைக்கப்பட்டவை அழிக்கப்படுகின்றன. ஆனால் பொலித்தீன், பொலிபுறப்பைலீன் மற்றும் பிளாஸ்டிக் என்பவற்றாலான பொருட்களை அல்லது அதன் பெறுதிகளை மண்ணிலுள்ள நுண்ணுயிர்கள் பிரிகையடையச் செய்யும் ஆற்றல் அற்றனவாக உள்ளன. அதேவேளையில், எரிகப்படும் இவ்வகையான பல்பகுதியச் சேர்வைகள் முற்றாக எரிந்து சாம்பலைக் கொடுப்பதில்லை. மாறாக பூரண தகனத்திற்கு உட்படாது கரிய நிறப் பெறுதிகளைக் கொடுக்கின்றன. இப்பெறுதிகளையும்கூட மண் நுண்ணங்கிகளால் பிரிகை அடையச செய்யமுடியாதுள்ளது. இவற்றின் பூரண பிரிகையடைதல் நிகழாதவிடத்தும், இவற்றின் எரியூட்டலில் மற்றும் இவை மண்ணிலுள்ள பல்வேறுபட்ட பொருட்களுடன் ஏற்படுத்தும் தாக்க விளைவுகளினால் உருவாக்கப்படும் நச்சுவாயுக்களும் சூழலிற்குப் பரவி எமக்கு ஆபத்தை ஏற்படுத்துகின்றனவாகும்.

இந்த நிலையில் நாம் பொலித்தீன் முதலியவற்றை நிலத்தில் புதைத்தோ அல்லது எரித்தோ அகறற முயலும்போது - எங்களை நாங்களே தற்காலிகமாகக் கழிவிலிருந்து விடுவித்துக்கொள்வதாக நினைத்துக் கொள்கிறோம். மாறாகச் சூழல் மாசடைதலிற்குத் தூண்டுகோலாக அமைகின்றோம் என்பதைச் சிந்திக்கத் தவறுகின்றோம். இந்தவகை சேதனப் பல்பகுதியங்கள் எக்காலத்திலும் எவ்நுண்ணங்கியாலும் அழிக்க முடியாதுள்ளது என இதுவரையான ஆய்வுகளை மேற்கோள்காட்டி விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக்குடன் பின்னிப்போயுள்ள எங்கள் வாழ்விலிருந்தும், சூழல் மாசடைதல் பிரச்சினையிலிருந்தும் எம்மை விடுவித்துக்கொள்ள வேண்டுமாயின், ஒன்று - இந்தப் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களின் பாவனையைப் படிப்படியாகக் குறைத்து அதற்கு மாற்றீடாகச் சூழலை மாசுபடுத்தாத மூலப்பொருட்களாலான பொருட்களைப் பயன்பாட்டில் எடுத்துக் கொள்ளவேண்டும். இரண்டாவது - பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனையை மேற்கொள்ளாது எமது அன்றாட வாழ்வை மாற்றியமைத்துக்கொள்ள வேண்டும். இதில் இரண்டாவதாகச் சொல்லப்பட்ட விடயததை எமமால் இலகுவாக நடைமுறைப்படுத்த முடியாது. ஆகவே முதலாவது வழிமுறை ஊடாக முதலில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் வகைகளாலான மூலப்பொருட்களையோ அல்லது முடிவுப்பொருட்களையோ எமது பிரதேசத்துக்கு இறக்குமதியாவதைத் தடைசெய்து அதன் பயன்பாடுகளைத் தவிர்க்க வேண்டும். இனி இவற்றின் பயன்பாட்டுக்கு நேரொத்த பயன்பாட்டைத் தரவல்லதும், நுண்ணங்கிகளால் இலகுவில் பிரித்தழியக்கூடியது மான பல்பகுதியங்களைக் கொண்டு மாற்றீட்டுப் பொருட்களை செய்யமுடியும் என்று விஞ்ஞானிகள் தற்போது கண்டுபிடித்துள்ளனர்.

உதாரணமாக, உயிர்ப் பல்பகுதியங்கள் என்ற வகைக்குள் அடங்கும் காபோவைதரேற்றுக்கள், புரதங்கள் மற்றும் இலிப்பிட்டுக்கள் என்பவற்றைக்கொண்டு எமக்கான பாவனைப் பொருட்களைத் தயாரித்துக் கொள்ளமுடியும். காபோவைதரேற்றுக்கள் எமக்கு மலிவாகவும், இலகுவாகவும் கிடைக்கக்கூடிய மூலப் பொருட்களாகும். இதனுள் அடங்கும் செலுலோசு மற்றும் மாப்பொருளைக்கொண்டு பல வகையான பாவனைப் பொருட்களைத் தயாரிக்க முடியும். தாய்லாந்தில் மரவள்ளிக் கிழங்கிலிருந்து பெறப்பட்ட மாப்பொருளைக்கொண்டு பல பாவனைப் பொருட்களைச் செய்துள்ளனர். திரவ உணவைக்கூடப் பாதுகாத்துக் கொள்ளவும், திரவநிலை உணவுகளைப் பரிமாறிக்கொள்ளவும்கூட இவ்வகை உயிர்ப்பல்பகுதியங்களாலான பாவனைப்பொருட்களைப் பயன்படுத்துகின்றனர். இலங்கையில்கூட இலங்கைப் பல்கலைக்கழக மாணவர் ஒருவரால், இத்தகைய உயிர்ப்பல் பகுதியத்தை மூலப்பொருளாகக் கொண்டு பொருட்களைப் பொதி செய்யக்கூடிய ஊடகத்தை உருவாக்க முடிந்துள்ளது என்பதையிட்டு நாம் பெருமைப்பட்டுக் கொள்ளவேண்டும். இங்கு அம்மாணவர், **Hawavi Nuga (Alstonia Macrophtylla)** என்ற தாவரத்தின் இலைகளைக் கொண்டுதான் அவ்வகை மூலப்பொருட்களை உருவாககியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்னும், தாவரங்களை அடிப்படையாகக் கொண்டு பச்சைப் பிளாஸ்டிக்குகளை அறிமுகப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளபபடுகின்றன. உதாரணமாக, சோளம் அல்லது வேறு தாவரங்கள் வளர்க்கப்பட்டு, அறுவடையின் பின்னர் அவை தொழிற்சாலைக்கு அனுப்பப்பட்டு, பிரித்தெடுக்கப்படும் வெல்லங்களை நொதித்தலுக்கு உட்படுத்தி இலத்திரிக்கமிலமாக மாற்றப்படுகின்றது. இவ்வமிலம் இரசாயனத் தாக்கங்கள் மூலமாக **PLA (Poly Lactic Acid)** எனப்படும் பச்சைப் பிளாஸ்டிக்குகளாக மாற்றப் படுகின்றன. அத்துடன் இன்னொரு வழியில் வெல்லங்களைப் பக்டீரிய நுண்ணுயிர்களின் உடலினுள் செலுத்தி நொதித்தலுக்கு உட்படுத்துவதன் மூலம் அங்கு ஒரு வகை பிளாஸ்டிக்குகளை உருவாக்கிப் பின்னர், அப்பக்டீரிய உடலங்களை உடைபபதன் மூலம் பெறப்படும் பச்சைப் பிளாஸ்டிக்குகள் **PHA (POLY HYDROXY ALKANOATE)** என்று வகைப்படுத்தப்படுகின்றது.






இந்தளவில் எம்மால் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் வகைகளைப் பாவிக்காமல் மரவள்ளிமாபை மற்றும் பச்சைப் பிளாஸ்டிக் வகைகளுக்கு எங்கேபோவது என்று அங்கலாய்க்காமல், ஏன் நாம் இப்படி முயன்று பார்க்கக்கூடாது என்று சற்றே சிந்தித்துப்பாருங்கள். பொலித்தீன் பைகளிற்குப் பதிலாக நிரந்தரமாகப் பனையோலைகளால் அல்லது பனையோலை ஈர்க்குகளால் பின்னப்பட்ட பைகளைப் பயன்படுத்தலாம். இன்னும் பிரம்புக் கூடைகள் அல்லது கம்புக்கூடைகள் என்பவற்றைக்கூட பயன்படுத்தலாம். **Lunch Sheet** இற்குப் பதிலாக எங்களிடம் கைவசம் உடனடியாக வீட்டிலேயே பெறக்கூடிய வாழை இலைகளைப் பயன்படுத்தலாம். கொழும்பிலே **"Banana Leaves"** என்ற பெயரிலே உணவகம் ஒன்றுள்ளதாம். அங்கு வாழையிலையில் தான் எந்தநேரமும், எந்தவொரு உணவுவகையும் பரிமாறப்படுகிறதாம். அத்தோடு அங்கு வேலை செய்யும் ஊழியர்கள்கூட பச்சை நிற அங்கிகளையே அணிகின்றனராம். கொழும்பில் உள்ள கடைக்குப்போகும் வாழையிலை எங்கே உற்பத்தியாகிறது? சிந்தியுங்கள்!

கையிலே நெய்யை வைத்துக் கொண்டு வெண்ணெய்க்கு அலைந்த கதைமாதிரி எங்கள் நிலைப்பாடு. எங்கள் நிலம் என்னதான் விளைவிக்காது! வாழை உற்பத்திக்குப் பெயர் போன நீர்வேலி, அச்சுவேலி மற்றும் வன்னிப் பகுதிகளின் வாழை உற்பத்தியாளர்கள் இன்று ஓரளவு தலைநிமிர்ந்து உள்ளார்கள். ஏனெனில், ஏ-9 பாதை திறப்புக் காரணமாக வடக்கு வாழைக்குலைக்கு நாடெங்கிலும் நல்ல கேள்வி எழுந்துள்ளது. இதையே ஒரு நல்ல சந்தர்ப்பமாக எடுத்துக்கொண்டு வாழையிலைகள் மற்றும் வாழைத் தடல்களின் பயன்பாட்டினையும் தெளிவுபடுத்தி அதன் விற்பனையை அதிகரிப்பது எமது ஒவ்வொருவரதும் கடமையாகும். முன்னைய காலங்களில் திருமண வீடு மற்றும் தமிழரின் இன்னோரன்ன சமய வைபவங்களில் வாழைத்தடல்கள்தான் உணவு பரிமாறுவதற்குப் பாவிக்கப்பட்டது. ஏன் இன்றுங்கூட நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய அன்னதான மண்டபத்திற்கு சென்றால் வாழைத் தடலில் சாப்பிடும் பாக்கியம் கிடைக்கும். அங்கு இதுவரை செல்லாதவர்கள் ஒரு முறை சென்று இந்த வாழைத் தடலில் சாப்பிட்டுத்தான் பாருங்களேன். உங்களிற்கே அதன் மகிமை தெரியவரும்.

இந்த வகையில் எம்மிடையே வாழை உற்பத்தியை அதிகரிப்போமானால் ஒருவழியாகப் பொலிததீனின் பாவனை குறைந்து இல்லாமல் போவதோடு, இன்னொரு வழியில் எமது வாழை உற்பத்தியாளர்களை ஊக்குவித்து அவர்களை முன்னேற்றுபவர்களாகவும் நாம் இருப்போம். வாழையிலைகளையோ அல்லது எந்தவொரு உயிர்ப்பல்பகுதியங்களாலான பொருட்களையோ நாம் தயங்காது பயன்படுத்தி, அவற்றினால் ஏற்படும் கழிவுகளை நிலத்தில் புதைத்தாலும் சரி அல்லது அவற்றை வெயிலில் நன்கு காயவிட்டு தீயிட்டு எரித்தாலும் சரி- அவை இலகுவில் நுண்ணுயிரிகளினால் பிரிந்தழிதலிற்கு உட்பட்டு அழிக்கப்படுகின்றன. இன்னொருவகையாக நோக்கும் போது, பாவித்த வாழையிலைகளை எமது கால்நடைகளிற்கு உணவாகப்போடலாம். எமது இன்றைய சந்ததியினர் இவ்வாறான பரந்துபட்ட சிந்திக்கும் ஆற்றலை இழந்து குறுக்குவழிகளைக் கையாண்டு சுலபமாகத் தேவைகளை முடிக்கும் திறனையே அதிகம் வளர்க்க விரும்புகிறார்கள். இயலுமானவரை இம்மனப்பாங்கை எதிர்கால சந்ததிக்கேனும் வளர்க்காது விடுவோம். யாழ்ப்பாணம் என்ன, இன்று நாட்டிலுள்ள பெரும்பான்மை உணவகங்களில் அலுமினியம் அல்லது உருக்கிலான தட்டுக்களே **Lunch Sheet** உதவியுடன் உணவு பரிமாறப் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் அவர்கள் தங்கள் வேலைப் பழுவைக் குறைப்பதுடன் வாடிக்கையாளர்களிற்கு ஒருவகையில் தொறறு நோய்களிற்கு வழிகாட்டும் நிலையிலுமுள்ளனர். ஏனெனில், எத்தனை உணவகங்களில் அலுமினியம் அல்லது உருக்கிலான தட்டுக்களைச் சுத்தப்படுத்திப் பாவிப்பார்கள்? ஒருவர் பாவிக்கும்போது **Lunch Sheet** கிழிந்து உணவு தட்டில்பட, அதனைச் சுததப்படுத்தாது, அடுத்தவருக்கு இன்னுமொரு கிழிந்த **Lunch Sheet** தெரிந்தோ தெரியாமலோ பயன்படுத்தப்பட்டால் உணவு தட்டில்பட, அதன் காரணமாக வரும் தொற்றுநோய்களிற்கு யார் பொறுப்பு? இப்பிரச்சினைக்கு எமது மக்களே தீர்வைக் காணவேண்டிய தேவை உள்ளது. ஒருமுறை பாவித்து வீசப்படும் பக்கவிளைவுகளற்ற வாழையிலை சிறந்ததா? இல்லை, ஒருமுறை பாவித்து வீசப்பட்டும் காலங்காலமாக அழிவடையாது இருந்து சூழலை மாசுபடுத்தும் பொலித்தீன்வகைகள் சிறந்தனவா? என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு எம் சந்ததியினுடையதே என்பதை மனதில்கொள்வோம். ✻

சபாரட்ணம் நகுலேஸ்வரன்,
விவசாய
இரசாயனவியற்துறை,
விவசாயபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சாவகச்சேரி | மருதனார்மடம் | ஊர்காவற்துறை | சங்கானை | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| பயிற்றை | 40/- | 40/- | 40/- | 50/- | 40/- |
| உருளைக்கிழங்கு | 40/- | 30/- | 40/- | 30/- | 40/- |
| கத்தரிக்காய் | 40/- | 40/- | 30/- | 60/- | 40/- |
| பாகற்காய் | 40/- | 30/- | 30/- | 25/- | 30/- |
| வெண்டிக்காய் | 30/- | 20/- | 20/- | 35/- | 20/- |
| கரட் | 40/- | 50/- | 40/- | 50/- | 60/- |
| பீற்றூட் | 40/- | 50/- | 20/- | 50/- | 40/- |
| வெங்காயம் | 20/- | 20/- | 20/- | 20/- | 25/. |
| பச்சைமிளகாய் | 40/- | 40/- | 40/- | 50/- | 40/- |

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
கொலை மேற்கொண் டாரின் கொடிதே
- அலைமேற்கொண்டு
அல்லவை செய்து ஒழுகும் வேந்து.
- திருக்குறள்.

# நமது நோக்கு

## வெறியாட்டம்

மானிப்பாய் பகுதியில் நேற்றுக்காலை - பெண் போராளிகள் மீது இராணுவத்தினர் மிலேச்சத்தனமான முறையில் நடந்துகொண்ட சம்பவம் - மக்களிடையே அதீத கோபத்தையும், அமைதியின்மையையும் உருவாக்கியிருக்கிறது.

பெண் போராளிகள் அணிந்திருந்த இடுப்புப்பட்டிகளை அகற்றுமாறு, பலவந்தமான முறையில் - காடைத்தனமான செயலில் இறங்கியதற்கு போராளிகள் எதிர்ப்புத் தெரிவிக்கவே -

அப்பெண் போராளிகளைக் கொடுமையான முறையில், மிருகத்தனமாகத் தாக்கியிருக்கின்றனர் படையினர். இதனைத் தட்டிக்கேட்கத் திரண்ட மக்களைக் கண்மூடித்தனமாகத் தாக்கியும் விரட்டியுமடித்தவர்கள் - அப்பட்டமாக ஒரு வெறியாட்டத்தினை நேற்று நடாத்தி முடித்திருக்கின்றனர்.

கடந்த சில வாரங்களாக - போராளிகள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும், போர்நிறுத்த மீறல்களில் மிகப்பாரதூரமான விடயங்களில் ஒன்றாக இந்தச் சம்பவம் அமைந்திருப்பதுடன்,

பெண் போராளிகள் மீது குறிவைத்து நடாத்தப்பட்டிருக்கும் இத்தாக்குதலின் மூலம் - எத்தகைய ஈனத்தனமான காரியத்தையும் செய்வதற்கு இராணுவத்தினர் தயாராகி வருகின்றனர் என்ற அச்சுறுத்தலும் வலுவடைந்துள்ளது.

கடந்த சில வாரங்களாகவே - போர் நிறுத்த வழிமுறைகளை மதிக்காத தன்மையுடனும், அமைதி நிலைக்கு ஆபத்தை ஏற்படுத்தும் பாணியிலும் படையினரின் செயற்பாடுகள் அமைந்து வருவதானது - அலட்சியப்படுத்தக்கூடியதொன்றல்லவே.

அதிலும் - மானிப்பாயில் நடைபெற்ற தாக்குதலானது - திட்டமிடப்பட்ட முறையிலேயே நடாத்தப்பட்டிருப்பதாகத் தெரியவருவதானது - அமைதிச் சூழலைச் சீர்குலைப்பதென்று தீவிரம் கொண்டுள்ள சக்திகள் படையினருக்குள்ளும் உரங்கொண்டு வருவதையே எடுத்துக் காட்டுகின்றது.

அதேவேளை - இச்சம்பவத்தைக் கண்டித்து, உடனடியாகவே அப்பகுதியில் திரண்ட பொதுமக்கள் - போராளிகள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட அரக்கத்தனமான தாக்குதலைத் தடுக்க முனைந்தபோதும், எதிர்த்து நியாயம் கேட்டபோதும் - அம்மக்கள் மீதும் தமது வெறியாட்டத்தை நடாத்தியிருக்கின்றனர் அங்கு நின்றிருந்த படையினர்.

இதன் தொடர்ச்சியாக - போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு சம்பவ இடத்திலிருந்தபோதே - அங்கு திரண்ட மக்கள் மீது கலகமடக்கும் படையினர் கண்மூடித்தனமாக சகட்டுமேனிக்குத் தாக்கியிருக்கின்றனர்.

இதன் மூலமாகவே - தமது அடாவடித்தனத்தை மக்கள் மீதும் திருப்பி, நியாயம் கேட்க முனைவோருக்கு அச்சுறுத்தல் விடுத்திருப்பதன் மூலம், தமது காட்டுமிராண்டித்தனமான செயல்களை மூடிமறைக்கவும், மக்களை மௌனிகளாக்கி பயமுறுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

தமிழர் கலாசாரத்தில் பெண்களுக்கு - மிக உயரிய ஸ்தானமும், கௌரவமும், பேணப்பட்டுவரும் நிலையில் -

அதிலும் குறிப்பாக விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை - பெண் போராளிகளின் தனித்துவமும், முற்போக்குத்திறனும் விடுதலைப் போராட்டத்தில் அவர்களது திறன்மிகுந்த செயற்பாடும் - தமிழ்ச் சமுதாயத்தில் பெண் போராளிகளுக்கு மிக உயர்நிலையை வழங்கியுள்ளபோது -

அத்தகையோர் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியதும், அவர்களைத் துன்புறுத்தியும் - கத்தியால் குத்தியும், சப்பாத்துக் கால்களால் உதைத்தும் கொடுஞ்செயல் புரிந்ததும் - தமிழ்மக்கள் மத்தியில் - தீவிரமான ஆத்திரத்தையும், பொறுக்கமுடியாத கோபத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

நடந்த சம்பவத்துக்கு இனி இத்தகைய வியாக்கியானங்களைக் கொடுப்பதற்கு படையினரோ, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரோ முயன்றாலும் -

போர்நிறுத்த மீறல் என ஒத்துக்கொண்டாலும் -

இந்தத் தாக்குதல் கிளப்பியுள்ள அதிர்வலைகள் தணிந்துவிடப்போவதில்லை.

தமது அட்டூழியத்தையும் அடாவடித்தனத்தையும் - கட்டாக்காலித்தனமாக கட்டவிழ்த்துவிடுவதில் படையினர் தொடர்ந்தும் ஈடுபாடு காட்டுவோர்களேயானால் - அதனைப் பொறுத்துக் கொள்ளவும், பார்த்துக்கொண்டு நிற்கவும் தமிழ் மக்கள் தயாராக இல்லை என்பதை படைத்தலைமைகளும், அரசாங்கமும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும் - இனியும் கவனத்தில் கொள்ளத் தவறினால், நிலைமை கைமீறிச் சென்றுவிடும் என்ற எச்சரிக்கையை சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனத்திற் கொள்ளவேண்டுமென்பதே - கொதித்து எழுந்துவரும் மக்களின் செய்தியாக இருக்கிறது.

# வரலாற்று சிறப்புமிக்க கந்தரோடையை சிங்கள பௌத்த சின்னமாக்கும் முயற்சி

(தொடர்ச்சி)

வரிவடிவ அமைதிக்குரிய சாசனமாக "ஆபதி" என்று எழுதப்பட்ட தமிழ் பிராமி சாசனம் ஒன்று கந்தரோடையினுடைய திராவிட பண்பாட்டினுடைய வளர்ச்சிக்கு வேண்டிய ஆவணமாக அமைவதை நாம் காண்கின்றோம். ஆபதி என்பது சங்ககால தமிழ் இலக்கியங்களிலே அடிக்கடி இடம்பெறுகின்ற



கந்தரோடையில் ரோம நாணயங்கள்

ஒரு சொற்தொடராக இருப்பதனைக் காணலாம். பசுக்களுக்கு ஒரு கூட்டத்தினுடைய தலைவன் என்ற கருத்திலே, ஒரு ஊரினுடைய தலைவன் என்ற கருத்திலே, ஆபதி என்ற சொற்பிரயோகத்துக்குரிய பொருள் கொள்ளப்படுகின்றது. எவ்வாறாக அது பொருள் கொண்டாலும் ஆபதி என்பது தமிழ் பிராமி ஓசையைக் கொண்ட ஒரு சாசனம் என்பதை எந்த ஆய்வாளருமே மறுக்கமுடியாது.

இந்தவகையில் கறுப்பு, சிவப்பு மட்பாண்டத்தில் வரையப்பட்ட வரிவடிவம் கந்தரோடை மீது திராவிடர் கொண்டிருந்த பங்கும், பணியும் பற்றி எடுத்துரைக்க வல்லதாகக் காணப்படுவதை அவதானிக்கின்றோம்.

இரண்டாவது தமிழ் பிராமி சாசனம் ஒன்று "குனி" என்ற ஒரு வாசகத்தைக் கொண்டு விளங்குவதனை நாம் காண்கின்றோம். அதனுடைய முற்பாகம் உடைந்துவிட்டதினால், அதனுடைய பிற்பாகம் தான் எமக்குக் கிடைத்திருக்கிறது. அந்தக் குனி என்ற சொல்லு அதனுடைய முன்னொட்டுப் பலவற்றுடன் இணைந்து வந்திருப்பதாக எடுத்துக் காட்டப்படுகின்றது. நாங்கள் உதாரணமாக "அம்மணி" என்று சொல்கின்றோம். அம்மணி என்பதில் வருகின்ற மணிபோல, குனி என்ற சொல்லுக்கும் பல முன்னொட்டுக்கள் இருந்திருக்கக்கூடிய வாய்ப்புக்கள் இருந்தாலும்கூட, நாம் ஒரு வரலாற்று தொல்லியல் ஆய்வாளர் என்ற அடிப்படையில் அது "பிக்குனி" என்ற சொல்லினுடைய இறுதிப்பாகமாக இருந்திருக்கும் என்ற ஓர் ஆதங்கத்தில், கந்தரோடையில் தமிழர்கள், பௌத்தர்களாக இருந்ததற்கான ஓர் ஆதாரமாக அதனைக் கொள்ள முடிகிறதென்பது குறிப்பிடத்தக்கது. ஏனென்றால், பிக்குனி என்ற சொற்றொடர் சிலப்பதிகாரத்தில் குறிப்பாக மணிமேகலையில் இடம்பெறுகின்ற சொற்றொடராக இருந்து கொண்டிருப்பதன் அடிப்படையில், பெண்கள் கந்தரோடையில் பௌத்த துறவிகளாக இருந்துள்ளார்களா? என்ற ஐயத்தை எழுப்பக்கூடிய சாசனமாகவும் அமைந்துவிட்டதென்றால் அது மிகையில்லை.

இதேபோன்று "அபிசிதன்" என்று வாசிக்கக்கூடிய வகையில் அன்விகுதியுடன் முடிவடைகின்ற ஒரு கறுப்பு, சிவப்பு மட்பாண்ட சாசனம் எமக்குக் கிடைத்திருக்கிறது. அபி என்ற சொல் தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் கிறிஸ்துவுக்கு முற்பட்ட தசாப்த காலங்களில் பொதுவழக்காக இருந்திருப்பினும் அல்லது ஈழத்து பிராமிக் கல்வெட்டுக்களில் அபி என்ற பெயர் ஒரு பொதுநடைமுறையாக இருந்திருக்கின்ற நடைமுறையையும் நாம் காணும்பொழுது அது கந்தரோடையிலும் அபி என்ற அடியுடன் தொடர்புபடக் கூடியபெயரை நாம் காண்கின்றோம்.

### கந்தரோடை ஆய்வில் சிங்களவர்கள்

கந்தரோடை மீதான ஆய்வுகளை முதன்முதலில் முனைப்பாக முன்னெடுத்தவர்கள் தெற்கிலிருந்து வந்த சிங்கள ஆய்வாளர்கள் என்பதில் சந்தேகமேயில்லை. அவ்வாறான ஆய்வாளர்களுள் குறிப்பிடத்தக்கவராக விளங்கியவர் போல் E.பீரிஸ் (peiris) என்பவராவார்.

இவர் தென்னிலங்கையிலிருந்து அடிக்கடி கந்தரோடைக்கு வருகை தந்து, கந்தரோடையின் மேற்பரப்பிலும் மண் மேடுகளிலும் காணப்பட்டிருக்கக்கூடிய பௌத்த சின்ன எச்சங்களைச் சேகரித்துச் சென்றதுமன்றி, காலத்துக்குக் காலம் கந்தரோடை மக்களால் சேகரித்துக் கொடுக்கப்படுகின்ற நாணயங்கள் போன்ற அருமையான சான்றுகளையும் தென்னிலங்கைக்கு எடுத்து சென்று அந்த நாணயங்களிலே காணப்படுகின்ற வடிவங்கள் எழுத்துக்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு அது பௌத்த சிங்கள மக்களின் குடியிருப்புக்களை உறுதிப்படுத்துகின்ற தொல்லியல் எச்சங்களாக பல ஆய்வுக் கட்டுரைகளிலே எழுதியிருந்தமையை நாம் காண்கிறோம்.

அவருடைய ஞாபகார்த்தமாக வெளியிடப்பட்ட போல் **E.Peiris** இன் **Felicitation Volume** லும் கூட கந்தரோடையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எழுத்துப் பொறிக்காத இரு பௌத்த சக்கர (நாணயங்கள்) என்ற தலைப்பிலே ஒரு கட்டுரை வெளியிடப்பட்டுள்ளதை காண்கிறோம்.

அந்த அச்சுக்குத்தப்பட்ட நாணயங்களிலே காணப்படுகின்ற அந்தக் குறியீடுகள் பௌத்த எச்சங்களாகக் கொண்டு அதனை சிங்கள மக்களினுடைய ஆதாரமாக எழுதியுள்ளார்.



கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட சங்ககால பாண்டியர் நாணயம்

உண்மையிலே அந்த இரண்டு நாணயங்களும் சங்க காலத்து பாண்டிய மரபுக்குரிய நாணயங்கள் என்பதனை அறியும் பொழுது, அந்த நாணயம் தொடர்பாக கொடுக்கப்பட்ட விளக்கம் எவ்வாறு அந்தக் கால கட்டத்திலே பௌத்த சிங்கள மக்களினுடைய மனதை ஊடுருவியிருக்கும் என்பதனை நாம் காணலாம்.

அண்மைக் காலங்களிலே யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டதை தொடர்ந்து எம்மால் மேற்கொள்ளப்பட்ட மேலாய்வுகளின் பயனாகவும், தொல்லியல் அகழ்வாய்வுகளின் பயனாகவும் பலதரப்பட்ட தொல்லியல் எச்சங்களை மீட்டெடுக்க முடிந்தது.

**செ.கிருஷ்ணராஜா**
**நேர்காணல்: சாந்தகுமார்**

அவற்றிலே குறிப்பாக பெருங்கற்கால பண்பாட்டு இருப்பினை உறுதிப்படுத்தும் தொல்லியல் எச்சங்களை நீக்கி பார்ப்போமேயானால் எமக்கு கிடைத்த நாணய வகைகளுள் அச்சுக் குத்தப்பட்ட நாணயங்கள் அதிகமாக காணப்படுவதும் அந்த வெள்ளியிலான அச்சுக் குத்தப்பட்ட நாணயங்களை தொடர்ந்து தமிழகத்து பாண்டியர் உடைய நாணயங்கள் பலவும், சங்க காலத்து சோழர் மரபுக்குரிய அச்சுக் குத்தப்பட்ட நாணயங்கள் சிலவும் கிடைத்திருக்கின்ற வகையை இங்கு குறிப்பிடலாம்.

இவற்றைவிட நாணய ஆதாரமென்று பார்க்கும்போது சுடுமண்ணிலான சூலம் வரையப்பட்ட சதுரமானதும் வட்டமானதுமான நாணய வகைகள் எமக்கு கிடைத்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த வட்ட வடிவமானதும் சதுரமானதும் சற் சதுரமானதுமான நாணயங்கள் கந்தரோடையினுடைய நகரத்தின் இருக்கையின் புராதன தன்மையை வெளிப்படுத்துவதாக இருப்பதை இங்கு குறிப்பிடலாம்.

(தொடரும்)

# ஜனாதிபதி, அமைச்சர் மாரப்பனவின் முரண்பட்ட அறிவுறுத்தல்களால் பாதுகாப்பு படையினர் குழப்பமாம்!

ஆயுதங்களுடன் விடுதலைப்புலிகள் உறுப்பினர்களைக் கைது செய்தால் மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுப்பது என்பதில் ஜனாதிபதி சந்திரிகாவும், பாதுகாப்பு அமைச்சர் மாரப்பனவும் முரண்பட்ட தகவல்களை வழங்கியுள்ளதால் இது குறித்து ஆயுதப்படையினரிடையே குழப்பநிலை தோன்றியுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப்புலி உறுப்பினர்கள் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டால் அவர்களிடமிருந்து எதிர்காலத்தில் இவ்வாறு ஆயுதங்களுடன் வரமாட்டோம் என எழுத்தில் உறுதிமொழி வாங்கிய பின்பே அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி ஆயுதப்படைகளுக்கு உத்தரவிட்டுள்ளார். அதேசமயம் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, ஆயுதங்களுடன் புலிப போராளிகள் கைதானால் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவேண்டும் என ஆயுதப்படைகளுக்கு உத்தரவிட்டுள்ளார். இந்த முரண்பட்ட அறிவுறுத்தல்களினால் பாதுகாப்புப்படை அதிகாரிகளிடையே குழப்பநிலை தோன்றியுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## உயர் பாதுகாப்பு வலய விவகாரம் முடிவுகட்டும் நேரம் நெருங்குகிறது!

### ஜெனரல் சதீஸ் நம்பியார் கருத்து

யாழ்.குடாநாட்டிலுள்ள உயர் பாதுகாப்பு வலய விவகாரத்தில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகளுக்கு முடிவுகட்டும் கட்டம் நெருங்கி வருவதாக ஜெனரல் சதீஷ் நம்பியார் தெரிவித்துள்ளார்.

வட-கிழக்குப் பகுதிகளிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக் குடியமர அனுமதிப்பது தொடர்பாக அறிக்கையை தயாரிப்பதற்காக வட- கிழக்குப் பகுதிகளுக்கு விஜயம் செய்த பின்னர் புதுடெல்கி திரும்பும்போதே ஜெனரல் நம்பியார் இக்கருத்தை வெளியிட்டார்.

அத்துடன், உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக கலந்தாலோசிப்பதற்கு தான் மீண்டும் இலங்கைக்கு விஜயம் செய்வது எப்போது என்பது குறித்து தீர்மானிக்கப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இறுதித் தீர்வுக்கு ஜனாதிபதி, எதிர்க்கட்சி எதிர்த்தால் பொதுத்தேர்தல்தான்!

### அமைச்சர் எஸ்.பி. திசநாயக்க தெரிவிப்பு

விடுதலைப் புலிகள் உடனான பேச்சுக்களில் இறுதித்தீர்வுக்கு ஜனாதிபதியோ எதிர்க்கட்சியோ சம்மதிக்காவிட்டால் பொதுத் தேர்தல் ஒன்றை சந்திப்பதைத் தவிர தமக்கு வேறுவழியேதும் இல்லை என அமைச்சர் எஸ்.பி.திசநாயக்க தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவும் எதிர்க்கட்சியும் வெளியிட்டுவரும் எதிர்எதிரான கருத்துக்கள் குறித்து கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.மக்களின் விருப்பத்திற்கு மாறாக ஜனாதிபதியோ, எதிர்க் கட்சியோ இறுதித்தீர்வை நிராகரித்தால் நாளையே நாம் பதவி விலகிவிடுவோம் எனவும் அமைச்சர் எஸ்.பி.திசநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

# அடிப்படை வசதிகளின்றி இயங்கும் சாவகச்சேரி தபால் நிலையம் !

(மீசாலை)

கடந்தகால யுத்தத்தினால் சேதமடைந்த சாவகச்சேரி தபால் நிலையம் அடிப்படைவசதிகளின்றி இயங்கிவருகின்றது. இதனால் தபால் நிலையத்தின் நாளாந்த நடவடிக்கையை மேற்கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி தபால் நிலையத்தின் கட்டடம் யுத்தத்தினால் சேதமடைந்துள்ளதால், சிறிய அறை ஒன்றிலேயே செயற்பட்டு வருகின்றது.

அத்துடன், அலுவலகத்தின் ஆவணங்களைப் பாதுகாத்து வைப்பதற்கு அலுமாரிகளோ, ஏனைய தளபாடங்களோ இல்லை.

கடந்த காலத்தில் இந்தத் தபாலகம் இயங்கியபோது இருந்த ஊழியர்களைவிட மிகக் குறைவான ஊழியர்களே தற்போது கடமையாற்றி வருகின்றனர்.

இந்தத் தபாலகத்தில் குடிநீர் வசதிகளோ, மலசலகூட வசதிகளோ இன்றி இங்கு கடமையாற்றும் ஊழியர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மேற்படி தபால்நிலையத்தினை புனரமைப்புச் செய்து, அங்கு நிலவி வரும் வெற்றிடங்களை நிரப்பி, மக்களுக்கு தபாற் திணைக்களத்தின் சேவைகளை நெருக்கடிகளின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தபாற் திணைக்களத்திடம் தபாலதிபர் கோரிக்கை விடுத்துள்ளார். (25,ச)

# தென்மராட்சி சமுர்த்தி வங்கி சனியன்று திறக்கப்படும்!

(மீசாலை)

தென்மராட்சி பிரதேசத்திற்கான சமுர்த்தி வங்கி அலுவலகம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்குச் சம்பிரதாயபூர் வமாகத் திறந்துவைக்கப்பட விருக்கின்றது.

வரணிச் சந்தைக்கு அண்மையில் அமைக்கப்பட்ட இந்த சமுர்த்தி வங்கிக்கான தளபாடங்கள், உபகரணங்கள் ஏற்கனவே செயலகத்தினால் வழங்கப்பட் டுள்ளதாகப் பிரதேச செயலாளர் கே.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (25,ச)



இளவாலை மாரீசன்கூடல் றோ.க.த.க.பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி நிகழ்வின்போது, புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் வணபிதா.ஜேம்ஸ் சிங்கராயர் அடிகள் வெற்றிபெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்குகின்றார்.

## சந்நிதியான் ஆச்சிரமத்தில்

(வடமராட்சி)

சந்நிதியான் ஆச்சிரம சைவக் கலைப் பண்பாட்டுப் பேரவையினால் வாராந்தம் நடாத்தப்படும் நிகழ்ச்சித் தொடரில் - நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள நிகழ்வில் 'அன்னதானக்கந்தன்' எனும் பொருளில் தொண்டைமானாறு வீரகத்தி மகாவிததியாலய மாணவி ப.தர்ஷிகாவும 'வேலுண்டு வினை தீர்க்க' எனும் பொருளில் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலய மாணவி பு.தேவரஞ்சனாவும் சொறபொழிவாற்றவுள்ளனர்.

## உயர்தொழில்நுட்ப கல்லூரியில் மகாபொல கொடுப்பனவு

(மீசாலை)

உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் கல்விகற்கும் மாணவர்களுக்கான கடந்த ஆண்டின் இறுதி மகாபொலக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தக் கொடுப்பனவு பெறத் தகுதியுடைய மாணவர்கள் அனைவரும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளுமாறு நிறுவனத்தின் இயக்குநர் ரி.இராஜரட்ணம் தெரிவித்துள்ளார். (25,ச)

## மெய்வன்மைப் போட்டிகள்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்கு மங்கையற்கரசி வித்தியாலய மெய்வன்மைப் போட்டி நாளைமறுதினம் சனிக்கிழமை பி.ப 2 மணிக்கு ஐக்கிய தீப மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு, பிரதமவிருந்தினராக முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர் இரா.சின்னத்தம்பி கலந்துகொள்வார். கௌரவ விருந்தினராக நெடுந்தீவு அரசியற்துறைப் பொறுப்பாளர் கண்ணன், கோட்டக்கல்விப் பணிப்பாளர் க.அரசரத்தினம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (113)

✦ ✦ ✦

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பி.ப 1.30 மணியளவில், பாடசாலை மைதானத்தல் அதிபர் த.நாகராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். கௌவரவவிருநதினராகத் தமிழீழக் கல்விக்கழகத்தைச் சேர்ந்த கவியன்பன் கலந்துகொள்வார்.

## வடமராட்சி கிழக்கில் கிராம அலுவலர்கள் இடமாற்றம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

வத்திராயன் கிராம அலுவலராகப் பணியாற்றிய ந.பாலசுந்தரம், போக்கறுப்பு கிராம அலுவலர் பிரிவுக்கு இடமாற்றப்பட்டுள்ளார். வத்திராயன் கிராம அலுவலர் பிரிவுக்கு க.மா.ஜோசப்பும், சுண்டிக்குளம் கிராம அலுவலர் பிரிவுக்கு செ.தோமஸ்யூட்டும் கிராம அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

# புன்னாலைக் கட்டுவன் பகுதிகளில் இரவு நேரத் திருடர் தொல்லை

## மின்சாரத்தைத் துண்டித்து திருடுகின்றனர்

(ஊரெழு)

புன்னாலைக்கட்டுவன், ஈவினை, மயிலங்காடு, குப்பிளான் போன்ற பிரதேசங்களில் இரவுவேளைகளில் திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளதாக இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இரவுவேளைகளில் வீடுகளுக்குத் திருடவரும் திருடர்கள் - மின்வாசிப்பு மானிக்குக் கீழ் உள்ள "பியூசை" அகற்றி மின்சாரத்தைத் தடைசெய்த பின், ஓடு பிரித்துத் திருடும் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

சில இடங்களில் இயற்கைக்கடன் கழிக்க வீட்டுக்காரர் கதவைத் திறந்து வெளியே செல்லும்போது, திருடர்கள் வீட்டினுள் உட்புகுந்து திருட்டில் ஈடுபடுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை, சில வீடுகளில் பிரதான ஆளியை நிறுத்திவிட்டு திருடிச்சென்ற சம்பவங்களும் இடம் பெற்றுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (96)

## இலக்கிய சமயப் பேருரையும் வேணுகான இசையும்

(யாழ்ப்பாணம்)

நல்லைக் ஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் இலக்கிய சமயப் பேருரையும், வேணுகான இசையும் நாளைமறுதினம் சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு பத்திரிகையாளரும் முன்னாள் நாடாளுமன்ற ஹன்சாட் அறிக்கையாளருமான செல்லப்பா நடராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் போராசிரியர் சு. சண்முகதாஸ் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (க)

எங்கே போகிறோம்...?

நேசன்

# உறவும் பொருளும்

கண்டங்களாக, நாடுகளாக, நகரங்களாக, ஊர்களாகப் பிரிந்து அமைந்துள்ளது மனிதகுலம். இத்தகைய பிரிவுக்குள்ளாகியிருப்பது இயற்கை விதி. இப்பிரிவுகளுக்குள் மனிதன் சிறுசிறு அலகுகளாக ஒன்றுபடுகிறான். ஒரு ஆணும், பெண்ணும் - கணவனும் மனைவியும் ஆகும்போது இணைப்பு உண்டாகிறது. அது பின் - குழந்தைகள், பின்வரும் உறவுகள் என விரிந்து சுற்றம், சொந்தம் என்றெல்லாம் பரந்துபடுகின்றது. இயல்பாய் வருகின்ற இந்த உறவுகள், பிணைப்புகள் என்பன தமக்கென அர்த்தமும், உள்ளார்ந்த ஈர்ப்பும் கொண்டனவாகி - வாழ்க்கை இனியதோர் அனுபவத் தொடராய் நீள்கிறது. சிறியதிலிருந்து பெரிதாய் விரிந்து நீள்கிற உறவின் நீட்சி அர்த்தமுடையதாய், வேண்டப்படுவதாய், நிறைவு தருவதாய் அமைகிறது.

இந்தப் பிணைப்பும், தொடர்பும் - அன்பு, காதல், பாசம் என்னும் உள்ளுணர்வுகளால் வலுப்பெற்றுச் சம்பந்தப்பட்டவர்களின் மகிழ்ச்சிக்கு வாழ்வனுபவ நிறைவுக்குக் காரணமாய் அமைகின்றன. மனிதனிடத்தில் மாத்திரமல்லாமல் - பறவைகள், விலங்குகளுக்குள்ளும் இத்தகைய ஒரு பிடிப்புணர்வு இருப்பதால்தான் அவற்றின் வாழ்க்கையில்கூட ஒரு அழகு, ஒரு நெகிழ்ச்சி தெரிகிறது. தும்பை அறுத்துக்கொண்டு தாயிடம் ஓடுகிற கன்றின் தவிப்பிலும் பரிவு பொங்க, நக்கிக்கொடுததுப் பாலூட்டும் பசுவின் பாசத்திலும் இருக்கிற ஏதோவொன்று எமது நெஞ்சைத் தொடுவதில்லையா?

தூரப்பறக்கும் பருந்தின் நிழல் கண்டு, பதறி ஓடித் தன் குஞ்சுகளுக்கு எச்சரிக்கை ஒலி வழங்கி, அவற்றைத் தன் சிறகுகளுக்குள் ஒடுக்கக் கொள்கிற கோழியின் தாய்ப்பாசம் எம் இதயத்தைத் தொடவில்லையா? அஃறிணைகளாகிய இவற்றின்நிலை அன்றிலிருந்து இன்றுவரை மாற்றமடையாது தொடர்கிறது. செயற்கை முறையில் சினைப்படுகிற பசுவிடமும் அதேபாசம் எஞ்சிக்கிடக்கிறது.

'இன்குபேட்டரி'ல் பொரித்து வருகிற கோழியிடமும் இதேபரிவு காணப்படுகிறது. (அடை காக்கத் தெரியாத கோழியும் இருக்கிறதே... அதனிடம் இந்தப் பாசம் காணக்கிடைப்பதில்லையே என்று யாரோ ஒரு புத்திசாலி கேட்க முனையக் கூடும்.)

ஐயா அது சரிதான் - கோழி விஷயம் அப்படிப் போனதொன்றும் பாதகமில்லை. இந்த மனுஷனை என்ன சொல்ல...?

'பற்றைக்குள் கிடந்த சிசுவின் சடலம் ~ இழுத்துச் சென்ற நாயிடமிருந்து மீட்டெடுத்தனர் பொதுமக்கள்' என்றொரு பத்திரிகைச் செய்தி - தாய் யாரெனக் கண்டுபிடிக்கப் பொலிஸார் தீவிரமாகப் புலன்விசாரணை மேற்கொள்கின்றார்களாம். எங்கே போகிறான் மனிதன்?

காலங்காலமாய் நாம் கற்று வந்த, கற்பித்து வந்த மரபுசார் விழுமியங்கள், பண்பாடு இவையெல்லாம் என்னவாயின?

கற்றுவந்த - கற்பித்துவந்த மேலான மனித மேன்மையின் குணாம்சங்கள் பொய்த்துப் போயினவா?

முன்னறி தெய்வங்கள் இப்போதெல்லாம் கோயிலுக்குள் போய் முடங்கிக் கொண்டனவா? பெற்ற பெண்ணையே பெண்டாள முனையும் தந்தையர் பற்றிக்கூடத் தகவல்கள் வருகின்றன. சமூக முன்னேற்ற அமைப்புக்களின் ஆய்வு அறிக்கைகள் மனிதகுலப் பண்பாட்டின் முகத்திலறையும் விதமாய்க் கொடிய உண்மைகளை வெளிக்கொண்டு வருகின்றன.

உண்மை கொடிதே...எனச் சொல்லி வாளாவிருந்து விடுவதா நம் செயல்...?

ஏன் இப்படி ஆயிற்று... என்ன நடந்து போயிற்று...

கற்காலம் - நாகரிகமுறாத காலம். விலங்கென மனிதன் வாழ்ந்த காலம் மீண்டும் வந்து கவியப் போகிறதா?

மேற்சொன்னதெல்லாம் மாதிரி உதாரணங்கள்தான். உண்மையான உதாரணங்கள், இதுபோல எத்தனை எத்தனையோ. அறியாமை இருள் மூலைகளுக்குள் நிகழ்ந்தேறி மறைந்துபோகும் பிறழ்வும், அழிவுப்பாதை நோக்கிய நகர்வும் இன்னும் பலவாய் இருக்கக்கூடும்.

ஒவ்வொன்றாய் எடுத்துப் பகுத்தாய்வதல்ல நமது பணி.

- எதில் இருக்கிறது தவறு? கல்வியின் போதாமையா - அணுகுமுறையின் குறைபாடா - வழிகாட்டலின் தவறான தன்மையா? -விழிப்பின்மையா- அலட்சியமா? வறுமையா....

ஐயோ! இப்படி ஆயிற்றே என மனம் துடித்து ஆளுக்காள் பேசிவிட்டு, அமைதியாய் இருந்து விடப்போகிறோமா...

சமூக மட்டத்தில் நிகழும் பிறழ்வு நிகழ்ச்சிகள் எமது மட்டங்களுக்குப் பரவவில்லை. பரவுவதற்கு வாய்ப்பில்லை எனக்கருதிக்கொண்டு இருந்து விடுவது புத்திசாலித்தனமாகுமா?

இவ்வாறானநிலை தோன்றிவிடுவதற்குக் காரணமாக, அடி ஆதாரமாக இருக்கக்கூடியவற்றைக் கண்டறிய வேண்டியது அவசியம் - மலையகத்தில் நிகழ்ந்த செயல்தானே என்று விட்டு, நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

எமது கல்வி முறையில், போதனைகளில், ஒழுக்கவியல் வழிகாட்டலில் - திருத்தங்கள், மாற்றங்கள் அவசியமாகின்றன - சமயக்கல்வி மட்டும் ஒழுக்கவியல் வழிகாட்டலுக்குப் போதுமென இனியும் கருதமுடியாது - அறிவியல்சார் ஒழுக்கவியல் போதனைகளும், கல்வி ஊட்டல்களும் தேவை.

இதயம் சாராத வெற்று அறிவுப் போதனை முறைகளும் - சோற்றுக்கு வழிதேடித்தரும் கல்வித் திட்டங்களும் இனியும் உதவமுடியாது. மனித மென்னுணர்வுகள் சரியாக இனங்காணப்பட்டு, பரஸ்பர நேசம் - கௌரவமான உறவு முறைகள - தெளிவான பார்வை - உயர்வு நோக்கிய பயணத்துக்கு உதவவல்ல கல்வி இவை யாவற்றினதும் அவசியம் உணரப்பட வேண்டும்.

ஒரு புறத்தில் தேசபக்தியும் - சுதந்திர வாழ்வின் அவசியமும் - இந்த விழிப்புணர்வும் உணரப்பட்டும், உணர்த்தப்பட்டும் வருகையில் இன்னோர் புறத்தில் இருள் நோக்கித்தள்ளும் குருட்டுப்போக்கு ஊக்குவிக்கப்படுகிறது. முன்னேற்றம் என்ற பெயரிலும், வளர்ச்சி என்ற பெயரிலும் வெற்று ஆரவாரங்கள் காற்றில் கலந்து, எமது இளம் சமூகத்தின் சக்தியை உறிஞ்சும் கொடுமை முடிவுக்கு வரவேண்டும். ஊடக வளர்ச்சி மனிதனை உயர்த்துவதற்குப் பதில் வெற்றுப்பொழுதழிக்கும் வீணாளாய் ஆக்கிவிடப் பார்க்கும் சீரழிவு கண்டு கொள்ளப்பட்டு- அந்தப் போக்குக்கெதிரான சரியான விழிப்பு அறிமுகமாக வேண்டும் - தேவை, மிகத் தெளிவான பார்வை - அவசியம், உடனடி நடவடிக்கை-விழித்துக் கொள்ளுமா சமூகம்?

**மீண்டும் சந்திப்போம்.....**



# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




## இன்னுமொரு 1975 அல்லது 1979?

இன்று நியூசிலாந்து அணிக்கு மிகமுக்கியமான போட்டி இது. ஏனெனில், கடந்த போட்டியில்



சிங்கத்துடன் ஆலோசனை.

இலங்கை அணியிடம் ஏற்பட்ட தோல்வி அவர்களின் **Supersix** கனவை சற்றே குழப்பியிருக்கின்றது. அவர்கள் கென்யாவில், சிம்பாவேயுடன் மோதமாட்டார்கள் என ஏற்கனவே முடிவு எடுத்தவர்கள்.


ஆனால், இலங்கையுடன் ஏற்பட்ட தோல்வி, அவர்கள் சிம்பாவேயுடன் போட்டியைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளியுள்ளது. இலங்கையுடனான போட்டியில் ஸ்கொட் ஸ்டைரிஸ் பெற்ற அற்புதமான 141 ஓட்டங்கள் அந்த அணியுடைய தோல்வியில் பெற்ற வெற்றி. அவர் முத்தையா முரளிதரனுடைய பந்துகளுக்குத் தொடர்ந்து பெற்ற **big six**கள் இன்று மேற்கிந்தியாவை நியூசிலாந்து பயமில்லாமல் சந்திக்க வைத்திருக்கின்றது.

இன்று **G.M.T.** நேரம் காலை 8 மணிக்கு **St.George's park, Port Elizabeth** மைதானத்தில் இந்த இரண்டு அணிகளும் மோத இருக்கின்றன. இன்றும் லாராவுடைய நேர்த்தியான ஆட்டம் மேற்கிந்திய அணிக்கு மிகவும் தேவை என்றே கூற வேண்டும். மார்லன் சாமுவேல்ஸ் இன்றும் அணியில் இடம் பெறக்கூடும் என்று **ICC** வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால், மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு இவர் வந்தால் யாரை நீக்குவது என்ற குழப்பம் இருப்பதுபோல் தெரிகின்றது. கடவுளால் கொடுக்கப்பட்ட கொடைபோல் மேற்கிந்தியத் தீவுகளுக்கு நல்லதொரு அணி கிடைத்திருக்கின்றது. நல்லதொரு தலைவர் கிடைத்திருக்கின்றார். இளம் பந்துவீச்சாளர்கள் வரிசையிலே டிரேக்ஸ் உடைய பந்துவீச்சு தென்னாபிரிக்க வீரர்கள் பலரை அவர்களது சொந்த மைதானத்திலே குழப்பியதை நாங்கள் முதல் போட்டியில் கண்டோம். எல்லோரும் எதிர்பார்த்ததுபோல் இந்த ஆடுகளங்கள் பந்துவீச்சாளர்களுக்குத் தோதானது போலத் தெரியவில்லை. பெறப்படுகின்ற ஓட்ட எண்ணிக்கைகளைப் பார்த்தால் 300 ஓட்டங்கள் என்பது சாதாரண ஓட்டங்களாக உள்ளது. எந்த அணி வெல்லும் என்று எதிர்வு கூறமுடியாத ஒரு அசாதாரணநிலை இந்த உலகக்கிண்ணப் போட்டிகளில் காணப்படுகின்றது. தனிநபர் 100 ஓட்டங்கள் என்பது ஒரு சாதாரணமான நிலையாக இந்தப் போட்டிகளில் காணப்படுகின்றது.

ஒரு பழமைவாய்ந்த **Test** மைதானமாகிய **Port Elizabeth** ஒருநாள் போட்டிக்கு ஏன் தெரிவு செய்யப்பட்டது என்பது ஒரு ஆச்சரியமான விடயந்தான். நியூசிலாந்து அணி இன்று கட்டாயம் வெல்லவேண்டிய நிலையிலுள்ளது.

இன்றைய போட்டியின் பிரதான மத்தியஸ்தர்களாக **RE.Koertzen, DB.Hair** ஆகியோர் கடமையாற்றுகின்றனர். **TV** மத்தியஸ்தராக



நம்பிக்கை நட்சத்திரங்கள்.

**S.Venkatragavan** கடமையாற்றுகிறார். 4 ஆவது மத்தியஸ்தராக **TL.Howell** மற்றும் போட்டியின் நடுவராக

### பஞ்சநாதன் சுதர்சன்

**MJ.Procter** ஆகியோர் கடமையாற்றுகின்றனர்.

அன்று நாதன் ஆஸ்ரல் **Run out** ஆகியது, இலங்கை அணிக்குக் கிடைத்த வெற்றிக்கான பிள்ளையார் சுழி என்றே கூறவேண்டும். நியூசிலாந்து அணித்தலைவர் ஸ்ரீபன் பிளமிங் உடைய அனுபவக் குறைவு தெரிகிறது. அவர் சற்று தன்னுடைய தலைமைத்துவப் பண்புகளை மாற்றி சில தந்திரங்களைக் கையாள வேண்டும். இன்றும் கடும் போட்டிதான். **Who will win BCWI? or N.C.B?**

## ஷெப்பர்ட் நீங்கள்தான் சரி

**பா**கிஸ்தான் - அவுஸ்திரேலியப் போட்டியின் 49 ஆவது ஓவர். வக்கார் பந்து வீசுகிறார் சிமண்ட்ஸுக்கு. இரண்டாவது பந்து (**BOUNCER**) மூன்றாவது பந்து (**BOUNCER**). சிமண்ட்ஸ் நிலைதடுமாறி நிலத்தில் சரிகிறார். அடுத்தகணம் வக்காரை அழைத்த மத்தியஸ்தர் டேவிட் ஷெப்பர்ட் மிகக் கடுமையாகக் கண்டித்ததுடன் அவருடைய ஓவரைத் தொடர்வதையே தடைசெய்துவிட்டார். மிகுதிப் பந்து மூன்றையும் வீசி முடித்தவர் ஷாஹிட் அப்ரிடி. இதேபோல பிரட் லீயையும் ஒருமுறை அழைத்து **Warning** கொடுத்தார். மிகச்சரியான நடவடிக்கை என்பதை எல்லா கிரிக்கெட் ரசிகர்களும் ஏற்றுக்கொள்வார்கள். டேவிட் ஷெப்பர்ட் பாராட்டுக்குரியவர். இந்தப் பிடி பிடிக்காவிட்டால் அநியாயமாகத் தலைகள் உருள்வதைத் தடுக்க முடியாமற்போகும். அத்தோடு ஆத்தாதவேலை செய்து வெல்ல முயற்சிக்கவும் கூடாதல்லவா. சிமண்ட்ஸ் இந்த ஆட்டத்தில் 143 (ஆ.இ.) **GROUND RECORD** ஓட்டங்கள் பெற்று ஆட்ட நாயகன். அவரை ஆஸ்பத்திரிக்கு அனுப்பவா முயல்வது?



சஞ்சயன்



ஜோசப் ஹரிஸ்

உலகக் கிண்ண ஆரம்பச் சுற்றுப்போட்டிகளில் ஒன்றில் டெஸ்ட் தரம் பெற்ற பங்களாதேஷ் அணியை கனடா அணி 60 ஓட்டங்களால் வென்று பரபரப்பை உண்டாக்கிவிட்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய கனடா 49.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 180 ஓட்டங்களைப் பெற, பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் 120 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது. இனி பங்களாதேஷ் அணி சந்திக்கப்

## இன்னும் என்ன துன்பமோ?

போகும் அணிகள் - கென்யா, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, இலங்கை மேற்கிந்தியத் தீவுகள்.

இதில் எதாவது ஒரு ஆட்டத்தையாவது பங்களாதேஷ் கனடாவைப் போல் ஆடுமா அல்லது பங்களாதேஷைப் போலவே ஆடுமா. என்றாலும் போராடித் தோற்றல் என்றொன்றிருக்கிறது. பங்களாதேஷ் அணி டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற நாடென்ற இன்னொன்றும் இருக்கிறது.

## தென்னாபிரிக்கா இலகுவாக வென்றது கென்யாவை!



வலுவுடன் பந்துவீச்சை நடாத்திய என்ரினி



கென்யாவின் தொடக்க ஆட்டக்காரர் ரவீந்து ஷா தடுமாறாமல் விளையாடி 60 ஓட்டங்களைப் பெற்றார்.

உலகக்கோப்பைக் கிரிக்கெட் போட்டியில் - நேற்று நடந்த மற்றுமொரு போட்டியில் தென்னாபிரிக்கா, கென்யாவை பத்து விக்கெட்டுக்களால் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கென்யா 38 ஓவர்களில் 140 ஓட்டங்களைப் பெற்றது. ஷா மட்டும் 60 ஓட்டங்களை அதிகூடியதாகப் பெற்றார்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய - தென்னாபிரிக்கா - 21.2 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி, 142 ஓட்டங்களைக் குவித்தது. கிப்ஸ் 87 ஓட்டங்களையும், கேர்ஸ்ரன் 52 ஓட்டங்களையும் பெற்றனர்.



பந்தைப் பிடிக்க முயன்று தவறி வீழ்ந்து கையை முறித்த றோட்ஸ்.

## இந்திய - ஹொலண்ட் ஆட்டத்திலிருந்து







① பூவா, தலையா? வென்றது கங்கூலி.

② ஹர்பஜன் விக்கட்டுக்களைச் சாய்த்த மகிழ்ச்சியில்.

③ உலகக்கோப்பை வரலாற்றில் அதிகூடிய எண்ணிக்கையைத் தொட்டார் சச்சின்.

## நாளும் ஒரு வினா

உலகக் கிண்ணத் தொடரொன்றில் கூடிய ஓட்டங்கள் பெற்ற வீரர் யார்?

சச்சின் டெண்டுல்கர் 523 (1996)

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

### இந்திய அணி எதிர் ஹொலண்ட் அணி

#### இந்திய அணி

| வீரர்கள் | ஓட்டங்கள் | பந்துகள் | நான்குகள் | ஆறுகள் |
|---|---|---|---|---|
| கங்கூலி | 08 | 32 | 0 | 0 |
| டெண்டுல்கர் | 52 | 72 | 7 | 0 |
| ஷேவாக் | 06 | 9 | 1 | 0 |
| டிராவிட் | 17 | 38 | 0 | 0 |
| யுவ்ராஜ்சிங் | 37 | 56 | 3 | 0 |
| கைஃப் | 09 | 21 | 0 | 0 |
| மொங்கியா | 42 | 49 | 2 | 0 |
| ஹர்பஜன்சிங் | 13 | 8 | 0 | 1 |
| கும்ளே | 09 | 7 | 0 | 0 |
| ஷாஹீர் கான் | 00 | 2 | 0 | 0 |
| சிறீநாத் (ஆ.இ.) | 00 | 0 | 0 | 0 |
| உதிரிகள் | 11 | | | |

மொத்தம் 48.5 ஓவர்களில் சகல விக்கெட் இழப்புக்கு - 204

#### ஹொலண்ட் அணி

| வீரர்கள் | ஓட்டங்கள் | பந்துகள் | நான்குகள் | ஆறுகள் |
|---|---|---|---|---|
| குளெப்பன் பேர்க் | 00 | 4 | 0 | 0 |
| வேன் பங்க் | 62 | 116 | 5 | 0 |
| மொல் | 02 | 30 | 0 | 0 |
| ஜியூடெறன்ற் | 00 | 6 | 0 | 0 |
| லீட் | 00 | 9 | 0 | 0 |
| வேன் ட்ரூஸ்ற் | 01 | 10 | 0 | 0 |
| ஷொல்ட் | 01 | 5 | 0 | 0 |
| லெஃவபர் | 03 | 14 | 0 | 0 |
| ஷீவேர்லி | 13 | 21 | 2 | 0 |
| ஸ்மிட்ஸ் | 26 | 66 | 0 | 0 |
| ராஜா (ஆ.இ.) | 00 | 10 | 0 | 0 |
| உதிரிகள் | 28 | | | |

மொத்தம் 48.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களும் இழந்து-136.

#### பந்து வீச்சு - ஹொலண்ட் அணி

| வீரர்கள் | ஓவர் | கன்னி ஓவர் | ஓட்டங்கள் | விக்கெட்டுக்கள் |
|---|---|---|---|---|
| ஷீவேர்லி | 10 | 2 | 49 | 0 |
| லெஃவபர் | 09 | 1 | 27 | 1 |
| லீட் | 9.5 | 0 | 35 | 4 |
| குளெப்பன் பேர்க் | 10 | 0 | 40 | 1 |
| ராஜா | 9 | 0 | 42 | 2 |
| ட்ரூஸ்ட் | 1 | 0 | 4 | 0 |

*நடுவர்கள்* : டி.கே. கார்ப்பர், பி. வில்லி
*மைதானம்* : பார்ல்

#### பந்து வீச்சு - இந்திய அணி

| வீரர்கள் | ஓவர் | கன்னி ஓவர் | ஓட்டங்கள் | விக்கெட்டுக்கள் |
|---|---|---|---|---|
| சிறீநாத் | 9.1 | 1 | 30 | 4 |
| ஷாஹர்கான் | 8 | 1 | 17 | 1 |
| ஹர்பஜன்சிங் | 10 | 1 | 20 | 1 |
| கும்ளே | 10 | 1 | 32 | 4 |
| கங்கூலி | 4 | 0 | 14 | 0 |
| டெண்டுல்கர் | 4 | 0 | 9 | 0 |
| ஷேவாக் | 3 | 0 | 6 | 0 |

உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003 இல் நேற்று நான்காவது நாள் போட்டியில் ஹொலண்ட் அணியை 68 ஓட்டங்களால் இந்தியா வென்றது.

இம்முறை உலகக்கோப்பைப் போட்டியில் இந்தியாவின் வெற்றிக் கணக்கு ஆரம்பம் இது.

*இந்தியா பெற்ற புள்ளிகள் - 04*

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# படையினர் தாக்குதல் நடவடிக்கை போர்நிறுத்த விதிக்கு புறம்பானது

## கண்காணிப்புக்குழு பேச்சாளர் ரொகில்சன்

மானிப்பாயில் விடுதலைப்புலிகளின் பெண் போராளிகளின் இடுப்புப் பட்டிகள் இராணுவத்தினரால் பலவந்தமாக அறுகப்பட்டதுடன், அப் போராளிகள் தாக்கப்பட்ட விடயம் கண்டிக்கத்தக்கதும், போர்நிறுத்த வழிமுறைகளுக்கு புறம்பானது மென கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ரெய்ரூர் ரொகில்சன் தெரிவித்தார்.

மானிப்பாய் சம்பவம் பற்றி நமது ஈழநாட்டுக்கு அவர் மேலும் தெரிவிக்கும்போது,

சம்பவம் நடந்தபோது அங்கு போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு இருந்த சமயமே போராளிகள் தாக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்த மக்கள் மீது கலகமடக்கும் படையினர் கண்மூடித்தனமான தாக்குதல் நடத்தினர்.

இதற்கு கண்காணிப்புக் குழுவினரே சாட்சியமாயிருக்கின்றனர். எதுவித காரணமுமின்றி ஐந்து பொதுமக்கள் இதன்போது காயமடைந்தனர்.

இது போர்நிறுத்தத்தை அப்பட்டமாக மீறியதோடு, எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளப்படவும் முடியாததாகும். பொதுமக்கள் மீது படையினர் தாக்குதல் நடத்தியதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் என்றும் அவர் கூறினார்.

### மானிப்பாயில்...

சேர்ந்த 8 பெண் போராளிகள், தமது வழக்கமான அரசியல் பணிகளை மேற்கொள்வதற்காக, யாழ். மானிப்பாய் வீதியால், மானிப்பாய் சந்தியைக் கடந்து - உடுவில் புறமாக திரும்பிச்சென்றுகொண்டிருந்தவேளை -

மானிப்பாய் இராணுவ முகாமின் முன்னணிக் காவலரண் வேலியைப் பழுது பார்த்துக் கொண்டிருந்த இராணுவத்தினர், உள்ளேயிருந்து வீதி கடந்து வீதிக்கு ஓடிவந்த இராணுவத்தினரும் திடீரெனப் போராளிகளை இடைமறித்துத் தாக்கத் தொடங்கினர்.

பெண் போராளிகள் அணிந்திருந்த இடுப்புப்பட்டியைக் கழற்றித் தருமாறு கூறிக்கொண்டும், இன்னும் தகாத வார்த்தைகளைக் கூறியவாறும் -

கத்தி, பொல்லு, இரும்புக்கம்பி, இரும்புச்சங்கிலி, வயர், கயிறு என்பவற்றாலும் இராணுவச் சப்பாத்துக் கால்களாலும் - படையினர் மேற்கொண்ட மிருகத்தனமான தாக்குதலில் அனைத்துப் போராளிகளுமே பலத்த காயங்களுக்கு உள்ளாகினர்.

ஒரு போராளியைச் சூழ பல இராணுவத்தினர் நின்று, அழுத்திப் பிடிக்க- ஏனையோர் தாக்கியதுடன், இடுப்புப் பட்டியையும் பலவந்தமாகக் கழற்றியுள்ளனர்.

இவ்வேளை - போராளிகள் தமது இடுப்புப்பட்டியைப் பாதுகாக்கும் பொருட்டு, தமது இரு கைகளாலும் இடுப்புப்பட்டியைப் பற்றியவாறு இராணுவத்தினருடன் போராடியுள்ளனர்.

இராணுவத்தினர், போராளிகளை அடித்து - தமது சப்பாத்துக் கால்களால் உதைத்துத் தாக்குதல் நடாத்திக் கொண்டிருந்த வேளையில் - அவ்வீதி வழியே போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த பொதுமக்கள், இச்சம்பவத்தினைக் கண்டு - போராளிகளைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டபோது - அவர்களும் இராணுவத்தினரின் மோசமான தாக்குதலுக்குள்ளாகினர்.

இச்சம்பவத்தில் - மோசமாகப் பாதிக்கப்பட்ட போராளிகள் சிகிச்சைக்காகவும், மருத்துவப் பரிசோதனைக்காகவும் தற்போது - மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவச் சீருடையிலும், சாதாரண உடையிலுமாக இருந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் இத்தாக்குதலில் ஈடுபட்டிருந்தனர்.

இவர்களுடன் - ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் சிலரும் இணைந்தே இத் தாக்குதலில் ஈடுபட்டனர்.

இதனபின்னர் 12.30 மணியளவில், 'பிக்கப்' வாகனத்திலும் ஒரு பஸ் வண்டியிலும் - இராணுவ ட்ரக் வண்டியிலும் - காங்கேசன்துறை வீதியால் மானிப்பாய் பகுதிக்குவந்த, கறுப்புத் துணியினால் முகமூடி அணிந்திருந்த 200 க்கும் மேற்பட்ட இராணுவத்தினர்- மரக்கட்டைகளாலும், தடிகளினாலும் - அப்பகுதியில் நின்ற மக்களைக் கண்மூடித்தனமாகத் தாக்கினர்.

இத்திடீர் தாக்குதலைத் தொடர்ந்து நாலாபக்கமும் சிதறுண்டு ஓடிய மக்கள் - சம்பவம் நடைபெற்ற இடத்தில் நின்ற போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகளிடம் முறையிட்டபோதும் - அவர்களால் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. இச்சம்பவத்தில் - பல பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரச படைகளால் நேற்று மேற்கொள்ளப்பட்ட அநாகரிகமானதும் மிலேச்சத்தனமானதுமான செயல் - மிக மோசமான யுத்தநிறுத்த மீறலாகும்.

இதயசுத்தியோடு சமாதான நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் புலிகளைச் சீண்டிவிடும் நோக்கத்தில் திட்டமிட்டே அரச படைகளால் இநத நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஏற்கனவே நடைபெற்ற பல சம்பவங்கள் தொடர்பாக - இறுதியாக நடைபெறற பேர்ளின் பேச்சுவார்த்தைகளின்போது புலிகளால் அரச பிரதிநிதிகளுக்குச் சுட்டிக் காட்டப்பட்டது.

இதன்போது - இவ்வாறான சம்பவங்கள் இனி நிகழாதென அரச தரப்புப் பிரதிநிதிகள் உறுதியளித்த பின்னரும் இச்சம்பவம் நடைபெற்றமை- சமாதான நடவடிக்கையில் புலிகளுக்கும், தமிழ்மக்களுக்கும் இருந்த நம்பிக்கையைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

எமது போராளிகள் எத்துணை இடர்ப்பாடுகள் வந்தபோதும் - எமது தலைமையின் கட்டளையை ஏற்று, புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பாதகம் ஏற்படாத வகையிலேயே செயற்பட்டு வருகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான - யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஒரு வருடத்தை எட்டுகின்ற இந்த நிலையிலும் - உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட பல விடயங்கள் இலங்கை அரசாங்கத்தினால் இன்னமும் முழுமையாக நிறைவேற்றப்படாமலேயே உள்ளன.

நிறைவேற்றப்பட்ட விடயங்கள் கூட, அவ்வப்போது ஒப்பந்த மீறல்களாகவும், புலிகளைச் சீண்டும் செயல்களாகவும் இருந்து வந்துள்ளதை கடந்தகால நிகழ்வுகள் - சுட்டிநிற்கின்றன.

இனிவரும் காலங்களில் இவ்வாறான உடன்படிக்கை மீறல் சம்பவங்கள் தொடராவண்ணமிருக்க உறுதியான நிலைப்பாட்டை எடுக்குமாறும் இத்தாக்குதல் தொடர்பாக யுத்தநிறுத்த மீறல் புரிந்த படையினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். மானிப்பாயில் அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை மீறல் சம்பவத்தை நாம் மிகவும் வன்மையாக கண்டிக்கின்றோம். தொடரும் சமாதானச் சூழல் - ஆரோக்கியமானதாக அமைய, அரச தரப்பும் - போர் நிறுத்தக் கணகாணிப்புக் குழுவினரும் ஏற்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

- என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

### பத்திரிகையாளர்...

சியளித்தது. இக்காட்சிகளை புகைப்படம் எடுக்க முயன்ற பத்திரிகையாளர் மீது படையினர் மூர்க்கத்தனமாகத் தாக்குதல் நடத்தினர். அவர்களின் புகைப்படக் கருவிகளையும் பலாத்காரமாக பறித்து வீதியில் வீசி எறிந்து உடைத்தனர்.

இத்தாக்குதலின் போது 'நமது ஈழநாடு' பத்திரிகையின் வலி -கிழக்குப் பிராந்திய செய்தியாளர் க.மனோகரராஜா (வயது 31), 'யாழ்.தினக்குரல்' பத்திரிகையின் செய்தியாளரான எஸ்.சிவபாலன் (வயது 21) ஆகியோர் தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர். இவர்களின் புகைப்படப் பிரதிகளும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன.

### நியாயம் கேட்டு...

பவ இடத்திற்கு இலங்கை போர் நிறுத்தக் கண் காணிப்புப் பிரிவின் அதிகாரிகள் படை அதிகாரிகளிடம் விசாரணை நடத்திக் கொண்டிருந்தனர். அச்சமயம் நூற்றுக்கணக்கான மக்கள் அவவிடத்திற்கு திரண்டு சென்று படையினர் மேற்கொண்ட அத்துமீறிய செயலை கண்டித்தும் இவ்வாறான சம்பவங்கள் இனிமேலும், நடைபெறாமல் தடுத்து நிறுத்த வேண்டும் என்று படை அதிகாரிகளிடமும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அதிகாரிகளிடமும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இச் சந்தர்ப்பத்தில் நீண்ட பொல்லுகள் சகிதம் புறப்பட்டு வந்த படைச் சிப்பாய்கள் பொதுமக்கள் மீது சகட்டு மேனிக்கு தாக்குதல் நடத்தினர்.

### யுத்தநிறுத்த...

வத் தளபதி மேஜர் ஜெனரல் இரட்ணசபாபதி, 513 வது பிரிகேட்டின் தளபதி ரஞ்சித் டீ சில்வா மற்றும் கேணல் செனிவரத்ன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சுமார் 3 மணிநேரம் நடைபெற்ற நீண்ட பேச்சுவார்த்தையின்போது மானிப்பாயில் நடைபெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்பின் கடுமையான கண்டனமும், காரசாரமான வாதமும் முன்வைக்கப்பட்டது.

இலங்கை போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழுவின் யாழ். அதிகாரியான ஒலேபுறுண்டம் தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது, நேற்றைய தினம் படையினர் மேற்கொண்ட போராளிகள் மற்றும் பொதுமக்கள் மீதான கண்மூடித்தனமான தாக்குதல் அப்பட்டமான யுத்த நிறுத்த மீறல் என்று கண்காணிப்புக் குழுவின் அதிகாரி தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் தொடர்ந்தும் இராணுவ சம்பந்தமான இடுப்புப்பட்டி அணிந்தால் அதுபற்றி படையினர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் மட்டுமே முறையிடுவர் என்றும் பலாத்காரமான செயல்களில் இறங்கமாட்டார்கள் என்று யாழ். மாவட்ட இராணுவத் தளபதி சரத் பொன்சேகா அப்போது தெரிவித்தார்.

அதேவேளை- பெண் போராளிகள் அணியும் இடுப்புப் பட்டியானது இராணுவ உடையோ அல்லது இராணுவச் சீருடையுடன் தொடர்புபட்டதோ அல்ல. அது சாதாரண மக்கள் பயன்படுத்தும் துணிகளால் ஆக்கப்பட்டதே. இந்நிலையில் இடுப்புப்பட்டி அகற்றும்படி கோருவது உரிமை மீறலே எனப் புலிகள் தரப்பு வலியுறுத்தியது. (க,ரா,லி)

# யாழ். நூலகத் திறப்பை எதிர்த்து பொது அமைப்புகள் போர்க்கொடி!

நாளை யாழ்.பொது நூலகத்தைத் திறந்துவைக்க யாழ். மாநகர சபை மேயர் எடுத்துவரும் முயற்சிகளை கண்டித்து, யாழ். மாவட்டத்தின் பல பொது அமைப்புக்களும் போர்க்கொடி தூக்கியுள்ளன. பூரணமாகாத நூல் நிலையத்தைத் திறக்க வேண்டாமென இவ்வமைப்புக்கள் கோரியுள்ளன.

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் முடிவடைவதற்குள் யாழ். பொது நூலகத்தைத் திறந்துவிட வேண்டும் என்ற தற்பெருமையை விட, வேறு எந்த உயரிய நோக்கமும் இருப்பதாகத் தெரியவில்லை. தம் பதவிக்காலத்திற்குள் திறப்பு விழாவை நடாத்தி முடிக்காவிட்டால் உள்ளூராட்சி சபை கலைப்பிற்குப் பின் வேறு சிங்களத் தலைவர்கள் இதைத் திறந்துவைக்கக்கூடும் என்ற காரணம் ஏற்கக்கூடியதல்லவென உயர்தர மாணவர் ஒன்றியம் பொது நூலகத் திறப்பில் அவசரம் ஏன் என்ற தலைப்பில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நூலக நலன்விரும்பிகள் விடுத்துள்ள ஒரு துண்டுப்பிரசுரத்தில், முழுமையாகப் பூர்த்தியாகாத நூலகத் திறப்பு முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டாம் எனக் கேட்கப்பட்டுள்ளது. நூலகத் திறப்பு விழாவைத் தற்காலிகமாக ஒத்திவைக்கும்படி சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றமும் கேட்டுக்கொண்டுள்ளது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் விடுத்துள்ள அறிக்கையில், எதிர்ப்புக்கு மத்தியில் அரைகுறையாக நூலகத்தைத் திறந்து வைத்தார்கள் என்ற பழி வராது மற்றவர்களின் உணர்வுக்கு மதிப்பளித்து நடவுங்கள் என்று கேட்டுக்கொண்டுள்ளது.

தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் தனது அறிக்கையில், நூலகம் அவசரமாக திறப்பதை வன்மையாகக் கண்டிப்பதாகவும் சகல வசதிகளுடன் நூலகம் மீளத் திறக்க வேண்டுமென்றே எதிர்பார்க்கிறோம் என்றும் குறிப்பிட்டுள்ளது.

வலி.வடக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம், யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் என்பனவும் இது தொடர்பாகக் கண்டனம் வெளியிட்டுள்ளன.

## துப்பாக்கிச் சூடு

சாவகச்சேரி ஈ.பி.டி.பி அலுவலகம் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் வலி. கிழக்கு பிரதேசசபைத் தலைவர் பூ.குணசிங்கம் (மாமா) நேற்றிரவு காயமடைந்தார்.

## என் கண்முன்னால்...

நேற்றைய சம்பவத்தைத் தொடர்ந்து,

நேற்று மாலை விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் மற்றும் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி உட்பட உயரதிகாரிகள் கலந்து கொண்ட சந்திப்பின்போதே - யாழ். மாவட்ட இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேற்படி கருத்தை தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### மயிலு சின்னத்துரை

கொல்லங்கலட்டி தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் (தற்போது இணுவில் கிழக்கில் வசித்து வந்தவருமாகிய) மயிலு சின்னத்துரை அவர்கள் நேற்று 12.02.2003இல் காலமானார்.

இவர் காமாட்சியின் அன்புக்கணவரும், சரோஜினி, இராசேஸ்வரி (ஆசிரியை கிளிநொச்சி மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தசாமி(அஞ்சலகம் காங்கேசன்துறை) சிவானந்தம் (சுபாஜினி ரேடேர்ஸ் கிளிநொச்சி), ஆகியோரின் அன்பு மாமனாரும், மயூரன், திருமகள், ரஞ்சீவ், கிருபாலினி ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2003) வியாழக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இணுவில் பூவோடை இந்து மயானத்தில் (முற்பகல் 11 மணியளவில்) தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*முகவரி:*
*கொக்கன்வளவு,*
*இணுவில் கிழக்கு,இணுவில்.*

(240)

தகவல்: **க.கந்தசாமி**
**சி.சிவானந்தம்,**
(மருமக்கள்)

மங்களகரமான திறப்பு விழா அழைப்பு

SUN

Sun Computers

காலம்: 14.02.2003 - காலை 10 மணி.

இல.316, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (யாழ்.மரக்கறிச் சந்தை முன்பாக) என்ற முகவரியில் அமைந்துள்ள SUN COMPUTERS கணினி விற்பனை நிலையம் திறப்புவிழாக் காண உத்தேசித்திருப்பதால் எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

சிறப்பு விருந்தினர்: திரு.K.பூரணச்சந்திரன் (இயக்குநர், ஸ்டார் இன்டஸ்ரீஸ்)

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்
நிர்வாகத்தினர்.

SUN COMPUTERS ஓர் IIS இன் சக நிறுவனமாகும்

ரூபா 14,750 இலிருந்து கணினிகளைப் பெற்றுக்கொள்ளலாம்!

(சி/584)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 13.02.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.